தர்மசக்கரம்



குரோதன ௵ சித்திரை ௴ சக்கரம் 34 ஆரம் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

குருகுலத்தில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான அறிக்கை

இந்தப் பள்ளியில் 4ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் உள்ளன. இதனுடைய தொடர்ச்சி 11, 12 வகுப்புக்கள் மதுரை ஜில்லா, திருவேடகம், விவேகானந்த மேல்நிலைப்பள்ளியில் அமைந்திருக்கின்றன. 8 ஆம் வகுப்பிலும் அதற்கு மேலான வகுப்புக்களிலும் புதிய மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. 4, 5, 6, 7, ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30 ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். அப்பொழுது மாணவர்களை நேரில் பார்த்து, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றைப் பரிசோதித்து அவர்களுக்கு இடமளிக்கப்படும். மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. பரீட்சைகள் மே மாதம் 30 ஆம் தேதி காலை 10-00 மணி முதல் முற்பகலிலும் பிற்பகலிலும் நடைபெறும். மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான முடிவுகள் அன்று மாலையிலும் இரவிலும் ஒவ்வொரு வகுப்பாக அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை. மாணவனை எடுத்துக்கொள்வதாக அறிவித்தவுடன் பொறுப்புத்தொகை ரூ. 300ம், சாமான்கள் பொருட்டு ரூ. 400ம் ஆக ரூபாய் 700 முன்பணமாகச் செலுத்த ஆயத்தமாக இருக்கவேண்டும். இங்கு இடம்பெற்ற பிறகு, முன்பு படித்த பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளிக்கூட மாற்ற சர்டிபிகேட் வாங்கித் தந்தால் போதுமானது. உணவு, உடை, வாடகை, முட்டுவழி மற்றும் எல்லாச் செலவுகளுமாக வகுப்புக்கு ஏற்ப மாதம் ரூ. 200 முதல் ரூ. 250 வரை ஆகும். இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர், 75 பைசா ஸ்டாம்பு அனுப்பிவைத்து "வித்யாவன குருகுல சட்டதிட்டங்கள்" என்னும் சிறு புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளலாம்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

மாணவ மாணவிகளுக்கு விடுதி வசதிகள்

மாணவர்களை மேல்நிலை வகுப்புக்களில் (11, 12) சேர்ப்பதற்கு:
விவேகானந்த மேல்நிலைப்பள்ளி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

மாணவர்களைக் குருகுலக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:
விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

குழந்தைகளை நர்ஸரியிலும், ஆரம்பப்பள்ளியிலும் (ஆண், பெண்) சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா பாலமந்திர், சேலம்-636 007.

மாணவிகளை உயர்நிலைப்பள்ளியில் சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா வித்யாலயா, சேலம்-636 004.

மாணவிகளைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா கல்லூரி, சேலம்-636 004.

என்னும் விலாசங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	குரோதன ஸ்ரீ சித்திரை மீ	ஆரம் 4

பொருளடக்கம்

பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி'யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 21—4—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சோமசுந்தரியம்மன் திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

பெங்களூரில் 28—4—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கண்டோன்மென்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை மாவட்டம்—பொள்ளாச்சியில் 28—4—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: மகாத்மா காந்தி மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்தில் 29—4—85 திங்கட்கிழமை

இடம்: தபோவனம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை மாவட்டம்—தேனியில் 1—5—85 புதன்கிழமை

இடம்: கணேச கந்தபெருமாள் ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தென்திருப்பேரையில் 5—5—85 ஞாயிறு

இடம்: ஸ்ரீ மகரநெடுங்குழைக்காதர் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—உத்தமபாளையம் பண்ணைப்புரத்தில் 5—5—85 ஞாயிறு

இடம்: நந்தகோபாலன் திருக்கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

வடஆற்காடு ஜில்லா—துரிஞ்சாபுரத்தில் 11—5—85 சனிக்கிழமை

இடம்: புஷ்பகிரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—ஆம்பூரில் 12—5—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு நாகநாத சுவாமி ஆலய திருமணமண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—குடியாத்தத்தில் 13—5—85 திங்கட்கிழமை

இடம்: வேதாந்த பாடசாலை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34	குரோதன ஸ்ரீ சித்திரை மீ	ஆரம் 4

பிரார்த்தனை

दामोदर गुणमन्दिर सुन्दरवदनारविन्द गोविन्द ।
भवजलधि मथनमन्दर परमं दरमपनयत्वंमे ॥ — शंकराचार्य

தாமோதர குணமந்திர ஸுந்தரவதனாரவிந்த கோவிந்த ।
பவஜலதி மதனமந்தர பரமம் தரமபநயத்வம்மே ॥ — ஆதிசங்கரர்

ஓ கோவிந்தா, ஓ தாமோதரா, உன் முகத்தாமரை பார்க்கப் பொலிவுடையது. உன்னுடைய உள்ளம் நற்குணங்களின் இருப்பிடம். மந்தரமலையை மத்தாகக்கொண்டு பாற்கடலைக் கடைந்ததுபோன்று உன் துணையைக்கொண்டு வாழ்க்கை என்னும் கடலை நான் கடைகின்றேன். அப்பொழுது வரும் ஆபத்துக்களிலிருந்து என்னைக் காப்பாயாக!

அங்கணெடு மதில்புடைசூழ் அயோத்தியென்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி
வெங்கதிரோன் குலத்திற்கோர் விளக்காய்த் தோன்றி
விண் முழுதும் உயக்கொண்ட வீரன்தன்னை
செங்கணெடுங் கருமுகிலை இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எங்கள் தனிமுதல்வனை எம்பெருமான் தன்னை
என்று கொலோ! கண்குளிரக்காணும் நாளே! — குலசேகராழ்வார்

அருள் விருந்து

பரநாட்டம் உடையவனுக்கு மௌனம் நல்லதொரு கருவியாம்.

ஏட்டுக்கல்விக்கு எட்டாத நிறைஞானம் அன்பில் உருவெடுக்கிறது.

பிறர்க்குக் கேடு விளைவிக்கும் கர்மங்களில் ஆத்ம சாதகன் ஈடுபடலாகாது.

மக்கள் எல்லார்க்கும் எல்லாத்துறைகளிலும் நலன் தருவது நல்ல ஆட்சியாம்.

கடமையை நன்கு நிறைவேற்றுகிறவனுக்கே தகைமை தானாக வந்தமைகிறது.

ஆத்ம சுத்தி அடைவதற்கேற்ப ஈசனுடைய சாந்நித்தியமே எங்கும் காணப்படுகிறது.

உள்ளத்தில் இருப்பதை விளக்குதற்கு மொழியானது சிறிதளவுதான் பயன்படுகிறது.

நலன் கேடுகளில் கட்டுண்ணாது இருப்பவனே பரத்தை அடையத் தகுதியுடையவன் ஆகிறான்.

மனிதன் தன்னைப் பண்படுத்துதற்கேற்ப சூழ்நிலையும் அவனுக்கு நல்லதாகத் திருந்தியமைகிறது.

தெய்வீகம் அனைத்துக்கும் உறைவிடமாக மகளிர் வடிவெடுத்து இருக்கின்றனர் என்பது மறைமொழி.

அஞ்ஞான இருள் அகலுமிடத்து மெய்ப்பொருள் தன்னைத்தானே விளக்கிக் கொண்டிருப்பதை ஞானி அறிகிறான்.

தேகாத்ம புத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ள இயக்கங்கள் யாவும் கர்ம காண்டத்துக்கு உரியவைகளாம்.

பெண்பாலரைத் தெய்வ சொரூபமாகப் பாராட்டுகிறவன் சமுதாயத்தில் தெய்வ சாந்நித்தியத்தைக் காண்கிறான்.

அகங்காரம் அகலுதற்கேற்ப மக்களை நல்வழியில் நடாத்துதற்குத் தகுதியுடையவனாய் மனிதன் திருந்தியமைகிறான்.

பரிபாகத்தில் வேண்டியவாறு முன்னேற்றமடைவதற்கான தெய்வீகம் மனிதன் உள்ளத்தில் புதைந்து இருக்கிறது.

இறைவனை நேரில் காண்பது அரிது. எனினும் மனிதன் புரிகின்ற செயலினின்று அவனை இறைவன் நல்வழியில் நடாத்துகிறான் என்பது வெளியாகிறது.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர்: "சாதனத்தின் ஆரம்ப தசையில் ஆத்ம சாதகன் ஒருவன் தன் வழிபடு தெய்வத்தை எல்லா விதமான மகிமைகளும் வாய்க்கப்பெற்றவராக உணருதல் வேண்டும். ஒரு நாள் தக்ஷிணேசுவரத்தில் வசித்து வந்த ஹஸ்ரா என்பார் நரேந்திரனிடம் இயம்பியதாவது: 'பரம்பொருள் அகண்ட வஸ்து. அவருடைய மகிமைகளும் வர்ணனையில் அடங்காதவைகள் ஆகின்றன. அத்தகைய அகண்ட வஸ்துவானவர் நீ படைக்கின்ற பண்டங்களையும், பழங்களையும் ஏற்றுக்கொள்ளுகின்றார் என்று நீ கருதுகின்றாயா? அல்லது நீ இனிய குரலிலே பாடுகின்ற ஸ்தோத்திரங்களுக்கு அவர் செவிமடுக்கின்றார் என்று நினைக்கின்றாயா? பரம்பொருள் இவைகளை ஏற்றுக் கொள்ளுகின்றார் என்று நீ கருதுவது பொருந்தாது.' இதைக் கேட்ட நரேந்திரனுக்கு ஒருவாறு மனத்தடுமாற்றம் ஏற்பட்டது. ஆகையினால் ஹஸ்ரா மீது நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டேன். அல்ப புத்திக்காரா! நீ இங்ஙனம் பகர்வாயாகில் நரேந்திரன் போன்ற இளைஞர்கள் பயின்று வருகிற பக்திக்கும் விசுவாசத்துக்கும் பேரிடைஞ்சல் ஏற்படாதா? சாதகன் ஒருவன் பக்தியைப் புறக்கணித்து விட்டால் அவன் கதி என்ன ஆகும் என்பதை நீ எண்ணிப்பார்த்தாயா? பரம்பொருள் அகண்ட வஸ்து என்பது உண்மையே. ஆயினும் அப்பெரிய பொருள் அடியார்களுக்கு எளியவராகின்றார் என்பதை நீ மறந்து விடாதே. தன் வீட்டுத் திண்ணையில் தன்னைப் பார்க்க வந்த நண்பர்களுடன் பணக்காரன் ஒருவன் வீற்றிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவனைக் காண அவனுடைய வாயில் காப்பாளன் ஒருவன் பணிவுடன் வந்து நிற்கின்றான். ஒதுங்கி நிற்கும் அவனுடைய கையிலே துணியால் மூடப்பெற்ற வஸ்து ஏதோ இருக்கிறது. அங்ஙனம் வந்தவன் தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தான். அவனைக் கண் எடுத்துப் பார்த்த எஜமானன் 'நல்லது வாயில்காப்பாளா உன் கையில் நீ வைத்திருப்பது யாது?' என்று கேட்கிறான். துணியால் மூடி வைத்திருந்த பொருளைத் தயக்கத்துடன் அவன் எடுத்துத் தன் எஜமானன் முன்னிலையில் வைக்கிறான். அதைப்பார்த்ததலைவன் இது நல்லசீதாப்பழம். இது உனக்கு எங்ஙனம் அகப்பட்டது? என்று தன் வேலைக்காரனிடம் கேட்கிறான். அதற்கு விடையாக வேலைக்காரன் விண்ணப்பித்ததாவது: "ஐயனே, தாங்கள் இதை அருந்த வேண்டும். நான் தங்களுக்காக வென்று இதைச் சிரமப்பட்டுத் தேடிக்கொண்டு வந்து இருக்கிறேன்." அவனுடைய அன்பையும் மரியாதையையும் காணலுற்ற எஜமானனுக்கு அவன் மீது அளவற்ற விருப்பம் உண்டாகிறது. அதைக் கையில் எடுத்துப் பார்த்த எஜமானன் ஆ! மிக நல்ல சீதாப்பழம். இதைப் பெறுதற்கு நீ சிரமம் மிக எடுத்துக் கொண்டிருக்கிறாய் என்பது வெளிப்படை. பக்தன் ஒருவன் தன் வழிபடும் தெய்வத்திடத்துக் காட்டுகிற பக்தியும் இத்தகையதாம்.

"எல்லாம் வல்ல இறைவன் பக்தனுடைய பக்திக்கு வசப்படுகிறார். ஹஸ்தினபுரத்துக்குப் பாண்டவர்களுடைய தூதனாக எழுந்தருளிய கிருஷ்ணபரமாத்மாவிடம் ராஜா துரியோதனன் பணிவுடன் நடந்துகொண்டான். தன்னுடைய மாளிகையிலே கிருஷ்ண பரமாத்மா அமுது பண்ணவேண்டுமென்று அவ்வேந்தன் விண்ணப்பித்தான். ஆனால் விதுரருடைய பக்திக்கு வசப்பட்டிருந்த கிருஷ்ணன் துரியோதனனுடைய வேண்டுதலுக்கு இணங்கவில்லை. விதுரருடைய வீட்டுக்கு அவர் எழுந்தருளினர். அவருடைய பரம பக்தனாகிய விதுரர் படைத்த எளிய உணவை அமிர்தத்துக்கு நிகராகக் கருதிக் கண்ணன் ஏற்றுக்கொண்டார்.

"சில வேளைகளில் நிறை ஞானி ஒருவர் பேயாண்டி போல் நடந்துகொள்கின்றார். ஏற்றுக்கொள்ளுகிற அன்னபானம் பொருத்தமானதா அல்லது பொருந்தாததா என்று அவர் விசாரித்துப் பார்ப்பதில்லை. புண்ணியம் பாபம் ஆகியவைகளையும் அவர் தம் கருத்தில் வாங்

கிக்கொள்வதில்லை. நிறைஞானி ஒருவனும் கல்லாத மடையன் ஒருவனும் ஒரே பாங்கில் நடந்துகொள்கிறார்கள். கங்கையில் நீராடு கின்றபொழுது ஞானி ஒருவன் ஐதிகமாக வந்துள்ள மந்திரத்தை உச்சரிப்பதில்லை. கடவுள் வழிபாடு செய்கின்ற பொழுது மூர்த்தியின் திருவடிகளில் அவன் மலரை ஒவ்வொன்றாகத் தூவுவதில்லை. கையில் கிடைத்த மலர் முழுதையும் ஒரே பாங்கில் பாதத்தில் போடுகிறான். ஐதிகமான ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும் அன்னவன் பொருள்படுத்துவதில்லை.

"உலக ஆசை இருக்கும் பரியந்தம் மானுடன் ஒருவன் தனக்கு அமைந்துள்ள நித்திய அனுஷ்டானங்களைப் புறக்கணிக்கலாகாது. போகத்தில் சிறிதளவு நாட்டம் இருந்தாலும் தனக்கு ஏற்பட்டுள்ள கிருத்தியங்களை மனிதன் செய்தாக வேண்டும்.

"கங்கா நதியிலே நங்கூரம் போட்டு நின்று கொண்டிருந்த கப்பல் ஒன்றின் பாய்மரத்தின் மீது பறவை ஒன்று இளைப்பாறும் பாங்கில் அமர்ந்திருந்தது. அதற்கிடையில் கப்பலோ நதியைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. வெகு தூரம் அது கடலுக்குள் சென்றுவிட்டது. இப்பொழுது இளைப்பாறியிருந்த பறவை பாய்மரத்ினின்று கிளம்பி நெடுந்தூரம் வடதிசை நோக்கிப் பறந்தது. ஆனால் நிலம் எங்கும் தென்படவில்லை. களைத்துப்போன பறவை மீண்டும் வந்து பாய்மரத்தின்மீது அமர்ந்து ஒய்வு எடுத்துக்கொண்டிருந்தது. இளைப்பாறிய பறவை பிறகு கீழ்த்திசை நோக்கிப் பறந்து போனது. எவ்வளவு தூரம் சென்றும் நிலம் அதன் காட்சியில் தென்படவில்லை. திண்டாடி அது பாய்மரத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தது. ஒய்வு எடுத்துக்கொண்டு தென்திசை மேற்குத் திசை ஆகியவைகளில் முயன்றும் அப்பறவைக்கு நிலம் எங்கும் அகப்படவில்லை. பாய்மரத்துக்குத் திரும்பி வந்து நிம்மதியாக அது அமர்ந்திருந்தது. எத்திசைக்குப் பறந்து சென்றும் அதற்கு நிலம் அகப்படவில்லையாகையால் தான் எடுத்துக்கொண்ட முயற்சியைப் புறக்கணித்துவிட்டு அமைதியாக அது பாய்மரத்தின் மீதே குடியிருந்து வந்தது. கவலையை ஒழித்ததின் விளைவாக அப்பறவைக்கு அமைதி இயல்பாகவே உண்டாயிற்று. இங்ஙனம் ஆத்மசாதகன் ஒருவன் ஆசையை ஒழித்துத் தள்ளுதற்கேற்ப அவன் பேரானந்தத்திற்கு உரியவனாகிறான்."

இக்கூற்றுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருந்த சேனாதிபதி விஸ்வநாதன் 'என்ன அற்புதமான உபமானம்!' என்று தமது அதிசயத்தை தெரிவித்தார்.

பரமஹம்சதேவர்: "இன்பத்தை உலகத்தவர் உலகெலாம் தேடியலைகின்றனர். ஆயினும் எங்குச் சென்றாலும் அவர்கள் நாடுகிற இன்பம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆதலால் தேடியலைந்ததின் விளைவாக அவர்கள் ஏமாற்றம் அடைந்தவர்கள் ஆகின்றனர். அவர்களைப் பிடித்துள்ள காமநோயும், காசு ஆசையும் அவர்களைப் பெரிதும் துன்புறுத்துகின்றன. சலிப்பும் ஏமாற்றமும் அவர்களை வந்து வாட்டுகின்றன. இங்ஙனம் படாதபாடுபட்டான பிறகு அவர்களுக்குச் சிறிது சிறிதாக விவேகமும், வைராக்கியமும் வாய்க்கின்றன. உலகிலே பலதரப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுள் ஒரு சிலர் காமத்துக்கும் காசு ஆசைக்கும் வசப்பட்டவர்களாகின்றார்கள். அவைகளைச் சுவைத்துப் பார்த்த பிறகே அவைகளில் அடங்கியுள்ள கசப்பு அவர்களுக்கு விளங்குகிறது. அங்ஙனம் இன்பத்தை நாடித் துன்பத்தில் உழன்றான பிறகே அவர்களுக்கு நல்லறிவு வருகிறது.

"இனிப்பரநாட்டம் படைத்தவர்கள் இரண்டு தரத்தார் இருக்கின்றனர். ஒரு தரத்தார் தங்களுக்கு ஒத்துள்ள ஏதோ ஓரிடத்தில் மட்டும் வசித்திருந்து சாதனங்கள்புரிகின்றனர். மற்றொரு தரத்தாரோ அடிக்கடி இடம் மாறிப் போகின்ற பாங்குடையவர்களாக இருக்கின்றார்கள். சாதகர்களுள் சிலர் வேண்டியவாறு ஸ்தல யாத்திரை போகின்றனர். ஒரு இடத்தில் தங்கியிருக்க அவர்களுக்குச் சாத்தியப்படுவதில்லை. வெவ்வேறு இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு அகப்படுகின்ற நீரைப் பருகுகின்ற பாங்குடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்குப்பஹூதகர்கள் என்னும் பெயர் வந்துள்ளது. வெவ்வேறு நீரைப் பருகுகின்றவர்கள் என்பது அப்பெயரின் விளக்கமாம். இங்ஙனம் அலைந்து திரிவதன் வாயிலாகத் தாங்கள் கொண்டிருந்த

அவாவை நிறைவேற்றுபவர்கள் ஆகின்றார்கள் அன்னவர்கள். கடைசியாக ஏதேனும் ஓரிடத்தில் குடில் ஒன்றமைத்துக்கொண்டு அதில் குடியிருக்க அவர்கள் தீர்மானிக்கின்றனர். பிறகு கவலை ஒழிந்தவர்களாகத் தியானத்தில் அமர்ந்திருப்பது அவர்களுக்கு எளிதாகின்றது. பின்பு இவ்வுலகில் அனுபவிப்பதற்கேற்ற பொருள் யாது உளது? ஆசைகள் அனைத்தும் காமத்திலும் காசு ஆசையிலும் முற்றுப்பெறுகின்றன. அவை யாவும் சிற்றின்பம் எனப் பெயர் பெற்றுள்ளன.

இவ்வுலகம் மேகம் படர்ந்துள்ள வானத்திற்கு நிகரானது. மேகத்தினின்று துன்பம் என்னும் மழை ஓயாது பெய்து கொண்டிருக்கிறது. ஏதோ சில வேளைகளில் மட்டும் சூரியன் தென்படுகிறது. அதேவிதத்தில் உலகத்தவர் தினையளவு இன்பத்தை நாடிப்பனையளவு துன்பத்துக்கு ஆளாய்க் கொண்டிருக்கின்றனர். இத்தகைய உலகத்தைக் கடவுள் ஏன் படைத்திருக்கின்றார் என்று சிலர் என்னைக் கேட்கின்றனர். இத்தகைய உலகில் திண்டாடிக் கொண்டிருக்கின்ற எங்களுக்கு விமோசனம் ஏதேனும் ஒரு விதத்தில் வந்து வாய்க்காதா? என்னும் கேள்வியைக் கிளப்புகின்றனர். ஏன் வழியில்லை? இந்தத் தயக்கம் எதற்காக? உண்மையிலேயே இங்குள்ள துன்பத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்ள மனிதனுக்கு இயலும். அறியாமையினால் இவ்வுலகிலுள்ள துன்பங்களை யெல்லாம் தன் தலையின் மீது வாரிப் போட்டுக் கொண்டு அவன் திண்டாடுகிறான். அதற்கு மாறாக அன்னவன் இறைவனிடம் அடைக்கலம் புகுவானாக. 'இறைவா! இவ்வுலக பந்தபாசம் எனக்குப் போதும். இதினின்று கிருபை கூர்ந்து தாம் என்னைக் காத்தருள்வீராக' என்று கண்ணீரும் கம்பலையுமாக அவன் தெய்வத்திடம் பிரார்த்தனை பண்ணுவானாக. விடுதலையை நாடி அவன் கசிந்து உருகுதற்கேற்ப விடுதலையும் அவனுக்கு வந்து வாய்க்கிறது. இத்தகைய பிரார்த்தனைக்கு நிச்சயமாகவே இறைவன் செவி சாய்க்கின்றார். அதன் விளைவாகச் சூழ்நிலையே அவனுடைய முன்னேற்றத்துக்கேற்றதாக மாறியமைகிறது.

பக்தனொருவன் இறைவனிடத்துக் கண்ணீரும் கம்பலையுமாகப் பிரார்த்தனை பண்ணுவானாகில் அவனுடைய வேண்டுதலுக்கு இறைவனும் நிச்சயமாகவே செவிசாய்க்கிறான். பக்தனொருவனுடைய மகன் நோய்க்கு ஆளானான். நாள் ஏற ஏற நோய் அதிகரித்துக்கொண்டே வந்தது. தந்தை பெருங் கவலைக்கு ஆளானான். தன் மகனை நோயினின்று விடுவிப்பது எப்படி என்று அவன் பலரிடம் கேட்டான். அவனுடைய மகனைக் காப்பாற்றுதற்கு உற்ற உபாயம் ஒன்று உண்டு என்று ஒரு பிரமுகரிடமிருந்து விமோசனம் வந்தது. அவன் கூறிய நிபந்தனைகள் இங்ஙனம் நிறைவேறின. சுவாதி நட்சத்திரம் உச்சத்துக்கு வந்திருக்கிறபொழுது மழை பெய்ய வேண்டும் என்பது முதல் நிபந்தனை. அதன்படியே அந்த நட்சத்திரம் உச்சத்திலிருந்தபொழுது மழை பெய்தது. அந்த மழை நீரில் சிறு பகுதி மாண்டுபோன மனிதன் ஒருவனுடைய மண்டை ஓட்டில் விழவேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை. அதன் பொருட்டு அம்மனிதன் பதைபதைப்புடன் இங்கும் அங்கும் ஓடினான். சுடுகாட்டுக்கருகில் கபாலம் ஒன்று கிடந்தது. தன் எண்ணம் நிறைவேற வேண்டுமென்று இறைவனிடம் அவன் அழுது பிரார்த்தித்தான். அடுத்த நிபந்தனைப்படி மண்டையோட்டில் வீழ்ந்திருந்த மழை நீரை அருந்த தவளை ஒன்று வந்தது. அதே வேளையில் அத்தவளையைப் பிடிக்க நாக சர்ப்பம் ஒன்று புதரினின்று அதன்மீது பாய்ந்தது. தவளையோ தப்பித்து ஓடிவிட்டது. நாகசர்ப்பம் செய்த முயற்சியின் விளைவாக அதன் நச்சுப்பையிலிருந்த விஷத்தில் ஒரு துளி மண்டையோட்டிலிருந்த நீரில் வீழ்ந்தது. அத்தகைய நீர்தான் அவனுக்குத் தேவையாயிருந்தது. பதைபதைப்புடன் அந்த நீரில் ஒரு சிறு பகுதியை நோய்வாய்ப்பட்டுக்கிடந்த மகனுக்கு இறைவனிடமிருந்து வந்த பிரசாதம் எனக் கருதி வழங்கினான். மகனும் தந்தை கொடுத்த மருந்தைத் தடை செய்யாது எடுத்துக் குடித்தான். நோயினின்று அவன் தப்பித்தான். பக்தி விசுவாசத்துடன் பண்ணுகிற பிரார்த்தனை ஆகாத காரியத்தை ஆகும்படி செய்கிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சியே சான்றாகிறது.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-4. செங்கதிரின் முன்மதியம் தேசுஅடங்கி [நின்றிடல்போல்
அங்கணனார் தாளில் அடங்குநாள் எந்நாளோ.

அங்கணன்-அழகிய கண்ணுடைய சிவன்.

உலகுக்கு வெளிச்சம் தரும் முறையில் படிகள் பல உள. இருண்டு வருகிறபொழுது மின்மினிப்பூச்சி தான் உலகுக்கு வெளிச்சம் தருவதாக எண்ணிக்கொள்கிறது முற்றிலும் இருண்டு போன பிறகு நட்சத்திரங்கள் தென்படுகின்றன. அவைகள் படலம் படலமாகப் பரவியிருக்கும் இருளை அகற்றுவதாக எண்ணிக்கொள்கின்றன. நள்ளிரவில் சந்திரோதயம் ஆகிறபொழுது நட்சத்திரங்கள் தாமே பின்னணிக்குப் போகின்றன. நிலா வெளிச்சம் நிலவுலகெங்கும் பரவியிருந்து அதன் சிறப்பை விளக்குகிறது. பிறகு காலையில் கதிரவன் தோன்றி வருகிறபொழுது அதுகாறும் உலகுக்கு வெளிச்சம் தந்து வந்த நிலாவின் பிரகாசம் தானாகக் குன்றுகிறது.

ஜீவாத்மாக்களிடம் ஆத்மப் பிரகாசம் நன்கு இடம் பெற்று மிளிர்கிறது. ஆனால் ஜீவர்கள் ஆறு ஞான பூமிகளில் கட்டுண்டு இருக்கிறார்கள். அந்தந்தப் பூமியின்தரத்துக்கு ஏற்றவாறு ஜீவர்களின் ஆத்மப்பிரகாசம் வெவ்வேறுபடித்தரங்களில் மிளிர்கிறது. ஆறுவது ஞானபூமியாகிய ஆக்ஞை சக்கரத்தை எட்டுகிறபொழுதே ஜீவாத்மன் முற்றிலும் பரிபாகம் அடைந்துள்ள மேல்நிலைக்கு வருகிறான். இதுவே ஆறுமுகக் கடவுளின் மேல்நிலைக்கோட்பாடாம். ஏழாவது ஞானபூமியாகத் திகழ்வது சுத்த சைதன்யம் அல்லது சுத்த சிவம். ஆகையினால் தான் சிவன் அங்கணனார் என இக்கண்ணியில் அழைக்கப் பெறுகிறார். தூய ஞானக்கண்ணே வடிவெடுத்தவர் அவர். ஆகையினால் அவர் சுத்தசைதன்யமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். பிரபஞ்ச அமைப்பில் மேகம் சிறிதுமில்லாத வெட்ட வெளியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சூரியன் சுத்த சிவத்துக்குச் சான்றாக வைத்து விளக்கப்படுகிறது.

மானுட நிலையை எட்டியான பிறகே ஜீவாத்மன் தான் புரிந்துவருகிற ஆத்ம சாதனத்தின் விளைவாக உபாதிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் களைகின்றான். உபாதிகளனைத்தும் நீங்கப்பெறுகிற நிலையில் ஜீவபோதம் ஏதும் அவனிடத்தில் நிலைத்திருப்பதில்லை. ஞானத்துறையிலோ ஜீவாத்மன் தான் அடைகின்ற பரிபாகத்துக்கேற்றவாறு ஜீவவியக்தியை ஒதுக்கித் தள்ளுகின்றான். சிவசொரூபம் படிப்படியாக அவனுக்குச் சொந்தமாகிறது. ஏழாவது ஞான பூமியை எட்டுகிறபொழுது சிவசொரூபத்தில் அவன் லயமாகிறான். இக்கோட்பாட்டைப் பக்திபூர்வமாக அங்கணனார் தாளில் அடங்கு நாள் எந்நாளோ என்று தாயுமானவர் பகர்கிறார்.

14-5. வானோடு அடங்கும் வளிபோல இன்புஉருவாம்
கோனோடு அடங்கும் குறிப்பு அறிவது
எந்நாளோ.

கோன்—ஞானகுரு.

இயற்கையின்கண் ஒவ்வொன்றுக்கும் பொருந்தியுள்ள சூழ்நிலை பொருந்தாத சூழ்நிலை என இரண்டு உள. பொருந்திய சூழ்நிலையில் உயிர் ஒன்று தனக்குச் சொந்தமாயுள்ள மேன்மையைப் பெறுகிறது. பொருந்தாத சூழ்நிலையில் அது திண்டாடுகிறது. வளர்ந்து வரும் செடி ஒன்றுக்கு நீரும் நிலமும் பொருந்திய சூழ்நிலையாம். காற்றும் வெப்பமும் அதற்குப் பொருந்தாத சூழ்நிலை. மான் ஒன்றுக்கு அடர்ந்த காடு பொருந்திய சூழ்நிலை பாலைவனமோ பொருந்தாதது. விமானத்தில் ஏறி மேலே போவதற்கு ஏற்பக் காற்று குறைகிறது. வெட்டவெளியின் பாங்கு அதிகரிக்கிறது. எனினும் வெளிக்கும் வளிக்கும் பொருத்தம் மிக உண்டு. ஆகவே ஜடப்பொருள் சேதனம் ஆகிய அனைத்துக்கும் பொருத்தமான சூழ்நிலை அமைவதும், பொருந்தாதது அமைவதும் இயற்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்குகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்திருந்தபொழுது கல்கத்தாவிலிருந்த அன்பர்கள் சிலர் படகுகளை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு ஆங்குப் போவார்கள். படகில் ஊர்ந்து கங்காநதியின் மேற்பகுதிக்

குப்போக விரும்பிய வேறு சிலரும் அந்தப் பக்தர்களுடன்கூடிச் செல்வார்கள். அங்கு அமைக்கப்பெற்றிருந்த தோட்டத்தின் அழகைக் கண்டு ரசிப்பார்கள். பிறகு கோயிலில் வழிபடுதற்குச் சிறிதுநேரம். பரமஹம்சரைத் தரிசிப்பதற்குச் சிறிதுநேரம். அதற்குமேல் தக்ஷிணேசுவரத்தில் அவர்களுடைய உள்ளத்தைக் கவருவதற்குரியது ஏதுமில்லை. திரும்பிப் போக அவர்கள் கருதுவார்கள். ஆனால் பக்தர்களோ உலகை மறந்துவிட்டுப் பரமஹம்சதேவரின் முன்னிலையில் நெடுநேரம் பரமானந்தத்தில் திளைத்திருப்பார்கள். அவர்களுடன் தக்ஷிணேசுவரம் வந்த ஏனையவர்கள் எப்போது திரும்புவது என்று திணறிக்கொண்டு இருப்பார்கள். இங்ஙனம் இயற்கையில் ஒரு சாரார்க்குப் பிடித்தமாயுள்ள சூழ்நிலை மற்றொருசாரார்க்குத் திண்டாட்டத்தை உண்டுபண்ணுகிறது.

சான்றோர் சன்னிதானம் அருள் நாட்டம் பிடித்தோர்க்குப் பரமானந்தத்தை ஊட்டுகிறது. அப்படி அவர்கள் அடைகின்ற ஆனந்தமே அன்னவர்கள் நல்வழியில் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாகிறது. இது இக்கண்ணியின் உட்கருத்தாம்.

14-6. செப்பரிய தண்கருணைச் சித்சுகனார் பூரணத்தில்
அப்பினிடை உப்பாய் அணையுநாள் [எந்நாளோ.

பூரணத்துக்கு வேண்டிய விளக்கம் தரலாம். எவ்வளவுதான் விளக்கம் தந்தாலும் அது போதவில்லை என்னும் எண்ணம் உள்ளத்தில் உதிக்கிறது. பூரணத்தை அறிந்துகொள்ளுதற்கேற்பச் சிதானந்தம் உருவெடுக்கிறது. ஆனால் சிதானந்தம் என்னும் பதத்தைக் கொண்டு அந்தச் சுகம் முற்றிலும் விளக்கப்படவில்லை என்னும் உணர்வு உள்ளத்தில் உதயமாகிறது. ஆதலால் சொல்லற்கரிய சிதானந்தத்தைச் சிற்சுகம் என்று ஒரு சொல்லால் விளக்குதல் அன்றி வேறு எதையும் செய்ய முடியாது. பரம்பொருள் செய்துள்ள உபகாரத்தைக் கருணை என்று சொல்லலாம். அது இனிமையே நிறைந்துள்ளது, அமைதியை உண்டுபண்ண வல்லது, ஆனந்தத்தைப் பெருக்க வல்லது என்று பதங்களை வேண்டியவாறு வாரிக்கொட்டலாம். நிஜநிலையானது அதீதத்தில் உள்ளது.

சொல்லற்கரிய அந்தப் பேரானந்தத்தை அனுபவிப்பதற்கான ஜீவவியக்தியைக் கலைத்துவிடாது கட்டிப்பிடிப்பது ஓர் உபாயமாகிறது. இக்கோட்பாட்டை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய மொழியில் சொல்லுமிடத்து'பக்தன் கற்கண்டைச் சுவைக்கிறான்; தானே கற்கண்டாக விரும்புவதில்லை.' இக்கோட்பாட்டை நம் அண்ணல் 'அப்பினில் உப்பாய்' என்று இயம்புகின்றார். அப்புஎன்பது நீர். உப்பு என்பது ஓர் உவர்ப்புப் பொருள். இவையிரண்டும் ஒன்றாய் ஈர்க்குமிடத்து அவைகள் அதனதன் இயல்பை இழத்தல் இல்லை. நூலோர் பரிபாஷையில் பேதா அபேதம் என்று இக்கோட்பாடு இயம்பப்படுகிறது. இது விசிஷ்டாத்வைத நிலை. இறைவனுடைய அருளுக்குப் பாத்திரம் ஆகின்ற நல்லார்கள் இங்ஙனம் பலப்பல படித்தரங்களிலிருந்து கொண்டு இறைவனிடத்திருந்து ஊற்றெடுத்து வரும் பேரானந்தத்தைப் புசித்துப் பரவசமடைந்திருக்கின்றனர். அப்படியிருப்பதற்குத் துவைத நிலையும் விசிஷ்டாத்வைத நிலையும் உற்ற உபாயங்களாம். உப்பு ஒரு பொழுதும் அப்பு ஆவதில்லை. ஆயினும் அது தன் வடிவத்தை இழக்கிறது. வடிவத்தை இழந்து இரண்டும் தோற்றத்தில் ஒரு பொருளாய் இலங்குமிடத்தே அதினின்று வரும் ஆனந்தம் உச்ச நிலையடைகிறது.

துவைதத்தில் ஊறியிருக்கும் பாமரனுக்கு இக்கோட்பாட்டை மற்றொரு பாங்கில் பகரலாம்.பண்டம் ஒன்றைப் புசித்து ருசிக்க அவன் விரும்புகின்றான்.எவ்வளவுக்கெவ்வளவு அவன் தன்னுடைய வியக்தியைப் புசிக்கும் பண்டத்தினிடத்து லயித்திருக்கச்செய்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அப்பண்டத்தை நன்றாக ரசித்தவனாகின்றான். 'நான் கற்கண்டைச் சுவைக்க விரும்புகின்றேன். நானே கற்கண்டாக விரும்புவதில்லை' என்ற பரமஹம்சர் கோட்பாடு துவைதத்துக்கும் விசிஷ்டாத்வைதத்துக்கும் முற்றிலும் பொருத்தமானதாம். துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று நிலைகளுக்கிடையில் ஆத்மசாதகன் ஏதேனும் ஒன்றில் உறுதியாய் நிலைத்திருந்து பரம்பொருளுக்கும் தனக்குமுள்ள இணக்கத்தை நிலைநாட்டுகிறான் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-15

அழசிங்கப்பெருமாள் என்பவர் அக்காலத்தில் சென்னையில் ஒரு கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். பரிவ்ராஜகராக அக்காலத்தில் இந்தியா முழுதிலும் தம்மை இன்னர் என்று காட்டிக்கொள்ளாது பிரயாணம் பண்ணிய விவேகானந்த சுவாமிகள் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அப்படி வந்து சேர்ந்த அந்த மகானை அணுகிய அவருடைய சிஷ்யர்களான கூட்டத்தில் அழசிங்கப் பெருமாள் ஒருவராவர். அவருக்கு அன்பர் பணிபுரிதலில் உற்சாகம் ஊட்டுதற்காக விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவினின்று 1894ஆம் ஆண்டில் எழுதிய கடிதத்தின் சாரம் வருமாறு: என் அன்பிற்குரிய அழசிங்கம்! நான் சொல்லும் விபரம் ஒன்றைக் கேள். ஒரு வீட்டுத் திண்ணையில் பிரமுகர் ஒருவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து முழ்கியவராகவிருந்தார். வீதியிலே வெறுமனே சுற்றிக் கொண்டிருந்த சோம்பேறி ஒருவன் அன்னவர் எதிரே வந்து நின்று கொண்டு 'திருவொற்றியூருக்கு வழி எது?' என்று கேட்டான். திண்ணையில் அமர்ந்திருந்தவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. வழிப்போக்கன் உரத்தகுரலிலே பலதடவை கேட்டும் அவர் பேசவில்லை. ஆதலால் அங்கு நின்று கொண்டு கூப்பாடு போட்டவன் தன் போக்கில் போக ஆரம்பித்தான். உடனே மௌனமுற்றிருந்த பிரமுகர் எழுந்து நின்று "இந்த வழியில் போ" என்று அவனுக்குப் பொருத்தமான விடை கொடுத்தார். "ஐயனே, நான் வற்புறுத்திக் கேட்டபொழுது விடை விடுக்காது அமர்ந்திருந்த தாம் இப்பொழுது ஏன் பேச ஆரம்பித்தீர்களோ அது எனக்கு விளங்கவில்லை என்ருன். அதற்கு அப்பிரமுகர் கொடுத்த விளக்கமாவது: 'நீ என்னைக் கேட்டபொழுது திருவொற்றியூர் போவதுபற்றிக் கவலையற்றவனாகத் தென்பட்டாய்.' ஆனல் இப்பொழுது நீ உன்னையே சார்ந்திருந்து வழி கண்டுபிடிக்க முயலுகின்ருய். சிரத்தையற்று இருந்த நீ சிரத்தாவான் ஆகியுள்ளாய் என்பதைக் கண்டதும் உனக்குத் தக்க உதவி பண்ண நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையினல்தான் நான் இப்பொழுது பேசுகிறேன்" என்று விடைகூறினர்.

இதில் வாழ்க்கையையொட்டிய பேருண்மை ஒன்று புதைந்திருக்கிறது. நல்ல காரியம் ஒன்று செய்து சாதிக்க முயலுகின்றவனுக்கு அவனுடைய ஊக்கத்துக்கேற்றவாறு உதவி வந்து அமைகிறது. நண்பா! இக்கோட்பாட்டை எண்ணிப்பார். நீ கற்றுள்ள கல்வி முழுவதும் உன்னுடைய நலனுக்காக அன்று. பிறர் நலனில் தீவிரமாகக் கருத்தைச் செலுத்து. பிறர்க்காகப் பணிவிடை பண்ணு. மக்களுக்குப் பணிவிடை பண்ணுவதற்கு நிகரான சாதனம் வேறு ஏதுமில்லை. வாரத்தில் ஒரு தடவை நல்வழி கடைப்பிடிக்கும் நல்லார் சிலரை ஏதேனும் ஓரிடத்தில் ஒரு மரத்தடியிலோ, ஒரு கோயிலிலோ ஒன்று கூட்டு. நீங்கள் எல்லாரும் சேர்ந்திருந்து சிறிது நேரம் இறைவனுடைய நாமத்தை ஓதுங்கள். இன்னும் சிறிது நேரம்தியானம் பண்ணுங்கள். பிறகு உபநிஷதம் போன்ற நல்ல நூல் ஒன்றை வியாக்யானத்துடன் ஆராய்ச்சி பண்ணுங்கள். இம்முயற்சியினின்று உங்களுக்கு நலன் பல உண்டாவதை நீங்களே காண்பீர்கள்.

உறுதியுடன் செயலில் இறங்கு. உனக்கு வேண்டிய துணை அனைத்தும் உன்னை வந்து சேரும். ஒவ்வொருவரும் தங்களையே நம்பி இருக்கவேண்டும். அதே போன்று ஒவ்வொரு நாடும் தன்னையே நம்பியிருக்கவேண்டும். நாம் எந்த நாட்டையும் சார்ந்திருக்கக்கூடாது. நாம் மறுமலர்ச்சி அடைவதற்கு அமெரிக்க நாட்டு நிதியைச் சார்ந்திருக்கக் கூடாது. நல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுங்கள். அதை மத்திய ஸ்தானமாக வைத்துக்கொண்டு ஆங்கு அருள் சக்தியை உண்டுபண்ணுங்கள். அவ்வருள் சக்தி நான்கு திசைகளிலும் வீசட்டும். தன்னம்பிக்கையும், தெய்வநம்பிக்கையும் பெற்றுச் செயலைத்துவக்குங்கள். சேவை மனப்பான்மை உடையவர்கள் நமக்குத் தேவை. நாம் தியாக உள்ளத்துடன் பணியில் இறங்குவோமானல் முழுநேரத்தையும் நம்பணிக்கு அர்ப்பணிக்கும் தியாகிகள் கிடைப்பார்கள்.

யக்ஞம்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ம் ஆண்டு விருதுநகர் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

பிரபஞ்ச வாழ்க்கை மூன்று படித்தரங்களில் காட்சி கொடுக்கின்றது. ஆரம்பதசையில் உயிர்கள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொள்கின்றன. வலிவற்ற உயிர்களை வலிவுடைய உயிர்கள் வென்று வாழ்ந்து வருகின்றன. போட்டி ஏற்படுகின்றவளவு வாழ்க்கை துன்பமயமாகக் காட்சிகொடுக்கிறது. இடைநிலையில் உள்ள உயிர்கள் பரஸ்பரம் உதவி செய்து சமுதாய வாழ்க்கை வாழ்ந்து வருகின்றன. இந்நிலையில் துன்பம் பெரிதும் குறைகின்றது. தனக்கென வாழாது பரமனுக்கென்றும், சமுதாயத்துக்கென்றும் வாழ்கின்ற வாழ்க்கைதான் தலையாய வாழ்க்கை ஆகின்றது. அத்தகைய வாழ்க்கை வாழ்பவர்கள் துன்பம் கலவாத இன்பத்தைத் துய்ப்பவர்களாகின்றனர். பறித்தல், பங்கிடுதல், படைத்தல் என்ற மூன்றில் உயிர்களினுடைய பாங்கைக் கூறலாம்.

ஆத்ம சாதகன் தன்னுடைய சுயநலத்தை மறக்கின்ற அளவு பரம்பொருளால் காக்கப்படுகிறான். தனக்குத்தானே பாதுகாப்புத் தேடிக்கொள்வதைவிடப் பரமனிடத்துத் தன்னை ஒப்படைத்துப் பரமனால் காப்பாற்றப்படுவது உயர்ந்த நிலையாகும். அது நிலைத்த பேருதவியாகும். சாதாரண ஜீவன்களுக்கு இவ்வுண்மை விளங்காது. தன் சுயப்பிரயத்தனத்தினால் தன் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமென்று ஜீவன் தன்னலத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றான். இவ்வாறு தன்னலத்திலேயே கருத்தாக இருப்பவன் கீழ்மகனாகின்றான். பண்பட்ட பெருமகன் பரத்துக்காகப் பணிவிடை பண்ணுவதை வாழ்வில் பெரிய பேறாகக் கருதுகின்றான். பரத்துக்காகப் பணிவிடை பண்ணுவதில் தன்னை மறக்கின்றான். பரத்தின்பால் தன்னை ஒப்படைக்கின்றான். அதன் விளைவாக இப்பிரபஞ்ச வாழ்வு பேரின்ப வாழ்வாக அமைகின்றது. அத்தகைய பேரின்ப வாழ்க்கையையும், அதைப் புறக்கணிப்பவன் நிலையையும் சீர்தூக்கிக் கிருஷ்ண பரமாத்மா பகர்கின்றார்.

यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
नायंलोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥

யக்ஞ சிஷ்டாம்ருத புஜோ யாந்தி ப்ரஹ்ம
[ஸநாதனம்
நாயம் லோகோ அஸ்த்ய யக்ஞஸ்ய
குதோ அன்ய: குருஸத்தம

யக்ஞத்தில் எஞ்சியிருக்கின்ற அமிர்தத்தைப் புசிக்கின்றவன் யாண்டும் இருக்கின்ற பரவஸ்துவை அடையப் பெறுகின்றான். யக்ஞம் செய்யாத மனிதனுக்கு எளிதில் அமையக்கூடிய இப்பூவுலக வாழ்க்கை சீரும் சிறப்பும் அற்றதாகப் போய்விடுகின்றது. இனி, இதைவிட உயர்ந்த உலகத்தை அவன் எப்படி அடையப் போகின்றான்? தனக்கென்று தேடுவதையெல்லாம் பின்னணியில் வைத்துவிட்டுத் தன்னைப் பரத்துக்கென்று ஒப்படைக்கின்றபொழுது அது யக்ஞமாகின்றது. அத்தகையவன் வாழ்கின்ற வாழ்வைச் சுருக்கமாகக் கிருஷ்ணபரமாத்மா சொல்கின்றார். அச்சுலோகம் வருமாறு:

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासियत्
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम्

யத்கரோஷி யதஸ்னஸி யஜ்ஜுஹோஷி
[ததாஸியத்
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ
[மதர்பணம்

"நீ எதைச் செய்தாலும், எதை அறிந்தாலும், எத்தவம் செய்தாலும், என்ன தானம் செய்தாலும் அவை அனைத்தையும் பரமனுக்கு அர்ப்பணமாகச் செய்துவா. அப்பொழுது வினைப்பயன் உன்னைத் தளைக்காது. வினைத்தளையினின்று நீ விடுதலை அடைவதற்குச் சுலபமான வழி அதுவேயாம்." இவ்வுண்மையை அறிந்து வாழ்கின்றவர்கள்தாம் உண்மையான ஆத்ம சாதகர்கள் ஆகின்றனர். அவர்களுடைய வாழ்வு உலகுக்குப் பயன்படுகின்ற பெரு வாழ்வு ஆகின்றது. இவ்வுலக வாழ்வு வாழ்வதற்கிடையில் பரமனுடைய சந்நிதியில் அவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். இவ்வுலகைக் கடந்து அதீத நிலைக்குச் செல்வது அவர்களுக்குச் சுலபமாகின்றது.

யக்ஞம் செய்பவன் படிப்படியாகப் பெரு நிலைக்குப் போகின்றான். நம் நித்திய வாழ்வில் இத்தத்துவத்தைக் கடைப்பிடிக்கின்ற பாங்கைப் பெரியவர்கள் மிக எளிதாகச் சொல்லி வைத்திருக்கின்றார்கள். உலக வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் ஐம்பெரும் வேள்விகளைச் செய்து வரவேண்டும். இவை பஞ்சமகா யக்ஞங்கள் என்று பகரப்பெறுகின்றன. உலகுக்கும் தெய்வத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகள் யாவும் பஞ்சமகா யக்ஞத்தில் அமைந்துள்ளன. பஞ்சமகா யக்ஞம் செய்பவன் முறையாக வாழ்ந்து வருபவன் ஆகின்றான். அவன் வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்தவனும் ஆகிறான். பிரபஞ்ச வாழ்வுக்குப் பஞ்சமகா யக்ஞம் இடைஞ்சலாக இராது துணையாக இருக்கின்றது. பரத்துக்குத் தகுதியுடையவனாக அது நம்மை ஆக்குகின்றது. தலைமாணாக்கனுக்குத் தேர்வில் தேறுவது சர்வ சாதாரணமாக வந்து அமைகின்றது. அங்ஙனம் பூவுலகில் பெருவாழ்வு வாழ்ந்திருப்பவன் எவ்வித சிரமமுமின்றிப் பரத்தை அடைகின்றான். தத்துவத்தை அறிந்து அதை வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொண்டு வருவது மனிதனுடைய கடமையாகும்.

தேவயக்ஞம், ரிஷியக்ஞம், பிதுர் யக்ஞம், நரயக்ஞம், பூதயக்ஞம் என்ற ஐந்தும் ஐம்பெரும் வேள்விகள் ஆகின்றன. நாள்தோறும் கடவுள் வழிபாடு முறையாகச் செய்து வருவது தேவயக்ஞம் எனப்படும். கடவுளுக்கும் நமக்கும் உள்ள இணக்கத்தைத் தேவயக்ஞம் மாறாத இணக்கமாக்குகின்றது கடல் அலையானது 'நெடுங்காலம் தான் கடலில் இருந்தாகிவிட்டது; இனி, சிறிது காலம் தரைக்குப் போய்ச் சுற்றிப்பார்த்து விட்டு வரலாம்' என்று எண்ணிக்கொண்டு கடலைவிட்டுப் பிரிந்துபோக முடியாது. கடலில் ஒருபகுதியாக அலை சதா இருந்து வருகின்றது. அதே போன்று ஜீவர்களாகிய நாம் பரமாத்மாவுக்குப் புறம்பானவர்கள் அல்லர். நாம் பரமாத்மாவுக்கே உரியவர்கள். இவ்வுண்மையைக் கோயிலில் கிரியை ஒன்றின் மூலமாகவும் விளக்குகின்றார்கள். கர்ப்பக்கிரகத்தில் மூல மூர்த்திக்குப் பின்புறம் ஒரு தீபம் ஏற்றிவைக்கப் பட்டிருக்கும். அத்தீபத்திற்குப் பின்புறம் பல இதழ்களையுடைய ஒரு தாமரை போன்று கண்ணாடி செய்து வைக்கப்பட்டிருக்கும். ஒரு தீபம் கண்ணாடியில் பல தீபங்களாகப் பிரதிபலிக்கும். அங்ஙனம் ஜீவர்கள் பரமாத்மாவின் பிரதிபலிப்பாக இருக்கின்றார்கள். வேதாந்த தர்சனப்படி ஜீவாத்மனுக்கு அமைந்த பெயர் சித் ஆபாசன். சித் ஆபாசன் என்பதற்குப் பிரதிபிம்பிக்கின்ற சித் சொரூபம் என்பது பொருளாகும். பரமாத்மனுடைய சாந்நித்தியம் ஜீவனின் அந்தக்கரணத்தில் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது. அந்தக்கரண சுத்தி அடைந்து வர வர அதன் சொரூபம் தெளிவடைகிறது. நாள்தோறும் நாம் பரமனோடு இணக்கம் கொள்கின்றவளவு நம்முடைய ஜீவ வியக்தி தெளிவடைகிறது. தெளிவு ஏற்பட ஏற்படப் பரத்தைக் கிரகிக்கக் கூடிய பரிபாகம் நமக்கு வருகிறது. மகாத்மா பகர்ந்துள்ளதாவது: "ஒரு நாள் பட்டினி இருப்பதில் எனக்கு நஷ்டமில்லை. ஒருவிதத்தில் அது எனக்கு லாபம் என்றே கூறலாம். இடையிடையே பட்டினி இருப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் அடைகின்றது. ஆனால் ஒருநாள் பிரார்த்தனை செய்யாது போனால் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது. நாள்தோறும் நாம் கடவுள் வழிபாடு செய்தாக வேண்டும். வழிபாட்டின் மூலம் நமக்கு மூலப் பொருளாக இருக்கின்ற பரமனோடு நாம் இணக்கம் வைக்கின்றோம்."

காமியப் பிரார்த்தனை பண்ணுவது வழிபாடு ஆகாது. சிலர் தம் விரோதி அழிந்து போக வேண்டும் என்று பிரார்த்தனை செய்வார்கள். அது அசுரத்தனமான பிரார்த்தனையாகும். தன்னைத் தெய்வத்தினிடம் ஒப்படைக்கின்ற வழிபாடுதான் சரியான வழிபாடு ஆகும். நீராடுவதன் மூலம் உடல் சுத்தி அடைகின்றது. வழிபாட்டின் மூலம் மனம் பரிசுத்தம் அடைகின்றது. மனம் பரிசுத்தம் அடைவதற்கு ஏற்பப் பகவத் சிந்தனை உள்ளத்தில் உருவெடுக்கின்றது. வழிபாட்டுக்கு என்று ஒரு சிறு அறை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் அமைத்துக்கொள்வது அவசியம். அப்படி அறையை அமைக்க இயலாதவர்கள் நல்ல இடத்தில் சுவரில் வழிபடும் தெய்வத்தின் படத்தை மாட்டி வைக்கவேண்டும். வீட்

டில் இருப்பவர்கள் நாள்தோறும் அப்படத்துக்கு வணக்கம் செய்யவேண்டும். வீட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து ஐந்து நிமிடம் பகவந் நாமத்தை உச்சரித்து ஒரு நிமிடம் தியானம் செய்து வழிபாட்டை முடிக்கவேண்டும். இது நல்ல பயிற்சியாகும். வாரத்தில் ஒருநாள் விரதம் இருக்கவேண்டும். அவ்விரத காலத்தில் காலையில் உணவில்லாதிருந்து மதியம் சமைத்த உணவை நைவேத்தியமாகப் படைத்துச் சிறப்பு வழிபாடு செய்து பிரசாதமாக உணவை ஏற்கவேண்டும். விரத நாளில் ஜபம், பஜனை முதலியவற்றில் ஈடுபடவேண்டும். விரதநாளன்று இரவில் உணவில்லாதிருக்கலாம்; அல்லது சிறிதளவு உணவு எடுத்துக்கொள்ளலாம். நம் முன்னேர்கள் சோமவார விரதம், சுக்லவார விரதம், சனிவார விரதம் என்று அனுஷ்டித்து வந்த விரதங்களை எல்லாம் நாம் இப்பொழுது மறந்துவிட்டோம். சிலர் விரதத்தின் மகிமையை அறியாது இரவில் பலகாரம் மட்டும் சாப்பிடுவது விரதத்துக்குப் பங்கம் உண்டாகாது என்று பலகார வகைகள் பலவற்றை உண்கிறார்கள். அப்படி உண்பவர்கள் விரதத்தை அனுஷ்டிப்பவர்களாகார். ஒரு நாளாவது வயிற்றில் உணவு குறைவாக இருப்பது உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரும். அப்போது பகவத் சிந்தனை மனதில் ஆழ்ந்து பதிகிறது. இம்முறைகளைக் கையாளுபவர்கள் தேவ யக்ஞத்தை முறையாக நிறைவேற்றியவர்களாகின்றார்கள். வீட்டில் இத்தகைய பயிற்சி இல்லாததே நாஸ்திகம் தலை எடுப்பதற்கு அடிப்படைக் காரணமாகும். இப்பயிற்சி வீட்டில் முறையாக நடந்து வந்தால் நாஸ்திகம் தானுக மறைந்து போகும். கடவுள் வழிபாடும் நல்லொழுக்கமும், ஆதாரக் கல்வியும் வீட்டில் துவங்கவேண்டும். அங்கு அவை இல்லாவிட்டால் மனம் கீழ்நிலைக்குப் போய்விடும். 'பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று அப்பர் கூறுகின்றார். கடவுள் வழிபாடு செய்யாது கழிந்த நாளன்று நாம் செத்துப்போனவர்களாகின்றோம். அன்று நாம் உயிர்வாழ்ந்தவர்களாகமாட்டோம். எனவே தேவ யக்ஞம் ஒவ்வொரு வீட்டிலும் கண்ணும் கருத்துமாக நாள்தோறும் நிகழ்ந்து வரவேண்டும்.

ரிஷியக்ஞத்துக்குப் பிரம்மயக்ஞம் என்பது மற்றொரு பெயர். பிரமதேவன் உலகத்தைப் படைத்தான். உலகைப் பற்றிய அறிவு வேதமாக வடிவெடுத்து வந்திருக்கிறது. உலகத்தின் அமைப்பை வேதம் விளக்குகின்றது. உலகத்தின் அமைப்பை அறிகின்றவளவு நாம் வேதத்தை அறிந்தவர்களாகின்றோம். வேதம் எந்த மொழியிலும் இருக்கலாம். உலக அமைப்பையும் அதற்கு அப்பால் இருக்கின்ற பரவஸ்துவையும் ரிஷிகள் விளக்கி இருக்கின்றார்கள். பழங்காலத்தில் இருந்தவர்கள் மட்டும் ரிஷிகள் என்று நாம் நினைக்கக்கூடாது. சான்றோர்கள், நிறை ஞானிகள், பக்தியில் முதிர்ந்தவர்கள் எக்காலத்தும் ரிஷிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகின்றார்கள். அத்தகையவர்கள் அனுபூதியின் வாயிலாகத் தாங்கள் அறிந்த பேருண்மையைச் சாஸ்திரங்களாக அமைத்து வைத்திருக்கிறார்கள். மக்கள் மீது அவர்கள் கொண்டிருந்த பேரன்பின் விளைவு அதுவாகும். பரதத்துவத்தை விளக்குகின்ற அவ்வரிய நூல்களை ஓதி உணர்ந்து வாழ்க்கையில் நாம் தத்துவத்தைப் பயன்படுத்தவேண்டும். தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலியன நமக்கு எளிதில் கிடைக்கும் நூல்களாகும். நம்முடைய நலத்துக்காகவென்று அந்நூல்களை அமைத்துத் தந்த அவர்களுக்கு நாம் கடமைப்பட்டவர்களாக விருக்கின்றோம். மகன் ஒருவன் தந்தை தேடிவைத்த செல்வத்தை விரயம் பண்ணுது விருத்தி செய்வானுகில் தந்தைக்கு அவன் பெரிய கடமையைச் செய்தவனுகின்றான். தந்தை தேடி வைத்த செல்வத்தை விரயம் பண்ணுபவன் தந்தைக்கேற்ற செல்வனுகமாட்டான். தந்தைக்கு அவன் கேடு செய்தவனுகின்றான். வாழ்க்கை சம்பந்தமான மேலான தத்துவங்களை அறிந்து அவற்றைக் கையாண்டு மக்கள் மேன்மை அடையவேண்டும் என்பதற்காக ரிஷிகள் அவ் ஆன்மீகச் செல்வத்தை நமக்குத் தந்திருக்கிறார்கள். நாம் நாள்தோறும் பக்தி சிரத்தையோடு முறையாக அவற்றை ஆராய்ச்சிசெய்து அவற்றிலுள்ள கருத்துக்களை நம்முடையவைகளாக ஆக்கிக் கொள்ளவேண்டும். நாம் உணவை உண்டு அதை ஜீரணம்

செய்து உடல் சொரூபம் ஆக்குகின்றோம். உண்ட உணவு ஜீரணமாகி உடலில் சேர வில்லை என்றால் உடலுக்கு அது ஆரோக்கியத் தைத் தராது. நாம் மேலாம் கருத்தை ஏற்று அதைச் சிந்தனை செய்து நம் மயம் ஆக்குகின்ற பொழுது நாம் ரிஷியக்ஞம் செய்தவர்களாகின் றோம். திருப்பாவையிலும் திருவெம்பாவையி லும் ஜீவாத்மாக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்கின்ற பாங்கில் 'ஏல் ஓர் எம்பா வாய்' என்று சொல்லி வைக்கப்பட்டிருக் கிறது. ஏல் என்பதற்கு 'இம்மேலான கருத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்' என்பது பொருள். ஓர் என்பதற்கு 'இதை எண்ணிப் பாருங்கள்' என்பது பொருள். எண்ணிப் பார்ப்பது என்பது ஜீரணம் பண்ணுவதற்கு நிகராகும். எண்ணிப் பார்க்கின்றவளவு கருத்து நமக்குச் சொந்தமாகின்றது. ஒரு காதில் வாங்கி,வாங்கிய விஷயத்தை மறு காது வழியே விட்டுவிடுவது அஜீரணத்துக்கு நிகரா கும். அப்படிக் கேட்ட விஷயம் உதவாத தாகப் போய்விடும். தத்துவத்தை முறையாக அறிந்துகொள்ளாது அதைத் தவறுதலாகக் கையாளுவதை அஜீர்ண வேதாந்தம் என்று சொல்வதுண்டு. அயலானை உனக்கு நிகராகக் கருதி நேசி. 'மன்னுயிரை எல்லாம் தன் உயி ராகக் கருதி அன்பு செய்' என்று பைபிள் உபதேசிக்கிறது. இந்த உபதேசத்தைப் பயன் படுத்தி 'நீயும் நானும் ஒன்று; பொருள் உன் னிடத்தில் இருப்பதும் என்னிடத்தில் இருப் பதும் ஒன்று தான். ஆகையால் உன்பொருள் என்னிடத்திலேயே இருக்கட்டும்' என்று கூறி எல்லாவற்றையும் தானே வைத்துக்கொண்டு யாருக்கும் எதையும் தராதவர்கள் இருக்கிறார் கள். தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொள் ளாது தாறுமாறாக அதற்குப் பொருள் கூறித் தங்களின்சுயநலத்தைப் பூர்த்திசெய்துகொள்ள முயல்வார்கள். ஜீரணமாகாத உணவு பயன் படாததுபோன்று மேலோருடைய கருத்து அவர்களுக்குப் பயன்படாது வீணைப் போய் விடுகின்றது. நாம் உய்தல் பொருட்டுச் சான் றோர்கள் மேலான கருத்துக்களை வழங்கி இருக்கின்றார்கள். அம்மேலாம் கருத்துக் களுக்கு ஏற்ற பிரகாரம் வாழ்க்கையை நாம் திருத்தி அமைத்தல்வேண்டும்.

பாரமார்த்திக நூல்களைச் சிரத்தையோடு படித்துச் சிந்தித்துப் பார்ப்பதற்குச் சுவாத் யாயம் என்று பெயர். சுவாத்யாயம் செய்வதி லும் மேலாம் கருத்துக்களைப் பிறருக்கு எடுத் துப் புகட்டுவதிலும் நாம் தவறக்கூடாது. நாள் தோறும் நாம் அதைச் செய்து வரவேண்டும். ஈண்டு நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டிய கருத்து ஒன்று உண்டு. கிறிஸ்தவர்களை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு எண்பது பேர் வீட்டில் பைபிள் இருக்கும். ஆனால் இந்துக்களை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு இருபது பேர் வீட்டிலாவது நம்முடைய சாஸ் திர நூல் இருக்குமா என்பது சந்தேகம் இன் னும் சிலர் வீட்டில் சாஸ்திர நூல்கள் இருக் கும். சரஸ்வதி பூஜையின்போது அவர்கள் அவற்றை எடுத்துப் பூஜையில் வைத்து அலங் காரம் செய்து வழிபாடு செய்து விட்டுக் கட்டி வைத்து விடுவார்கள். ஆண்டில் முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் பயன்படுத்தி விட்டுச் சரஸ்வதி பூஜையன்று பூஜையில் வைத்தால் அதற்கு அர்த்தம் உண்டு விஜயதசமியன்று மீண்டும் சாஸ்திர ஆராய்ச்சியைத் தொடர வேண்டும். சான்றோர்கள் நமக்குத் தந்துள்ள கருத்துக்களைத்தினசரி ஆராய்ச்சிசெய்ய வேண் டும். தினசரி அக்கருத்துக்களைச் சிந்திப்பதுநல்ல தியானமாகும். அப்படிச் செய்வதன் மூலம் அறிவு தெளிவடைகின்றது. அக்கருத்துக்கள் மயமாக நாம் மாறி அமையும்பொழுது ரிஷி யக் ஞத்தைமுறையாகச் செய்தவர்களாகின்றோம். பக்திமயமான பாடல்களை நாள்தோறும் ஓதி வரவேண்டும் சிறுவர் சிறுமியர்களுக்கு அப் பாடல்களை நாள்தோறும் ஓதும் பழக்கத்தைத் தரவேண்டும். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்பது நாள்தோறும் சுவாத் யாயம் செய்து வரும் பழக்கத்தைக் கைவிட்டு விடலாகாது என்பதை வலியுறுத்துகிறது.

சுவாத்யாயம் செய்வதன் மூலம் நல்ல கருத்துக்களை மனம் சிந்தித்துக்கொண்டே இருக்குமானால் மனம் தூய்மையடையும். மனம் தூய்மை பெறப்பெற அது சக்தி மிக வாய்ந்த தாகிறது. நற்சிந்தனையில் மனதை உறுதிப் படுத்தும் செயலைச் சுவாத்யாயம் செய்கிறது. அப்பொழுது மனம் தீய சிந்தனையிலிருந்து சுலபமாக விலகிக்கொள்ளும். (தொடரும்)

மீராபாய் சரிதம்

[102 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மீராபாயின் தந்தை அவள் மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினர். தன்னுடைய மனநிலையை அறிந்துகொள்ளாது தந்தை பேசுவதை அறிந்த மீராபாய் வருத்தமடைந்தாள். தந்தையிடம் அவள் பகர்ந்ததாவது: "பந்த பாசத்தில் உழன்று கிடக்கும் பேதைகள் பேசும் பிதற்றல்களைக்கேட்டு நீங்கள் வருத்தமடைந்து என்னையும் கோபித்துக்கொள்கிறீர்கள். இவ்வுலக மக்களின் பிதற்றல்களை நான் பொருள்படுத்த மாட்டேன். என்னுடைய பரிசுத்தத் தன்மையைப் பகவானே அறிவார். உலகமே ஒன்று சேர்ந்து என்னைப் பகைக்கினும் நான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை. என் உடலையும், உயிரையும் கண்ணனுக்கு அர்ப்பணித்து விட்டேன். இனி என் உள்ளம் வேறொருவனை நாடாது. நான் குற்றமுடையவளாயிருந்தால் அன்றோ ஊரார் பேச்சுக்குச் செவி சாய்க்கவேண்டும்? பகவானையும், பக்தர்களையும் பூஜிக்கும் செயலில் என் இஷ்டப்படி செல்ல என்னைவிட்டு விடுங்கள். இது விஷயத்தில் நீங்கள் தலையிடவேண்டியதில்லை. பகவானுக்கு ஆட்பட்டவர்கள் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. தங்களுடைய அபிப்பிராயத்துக்கு மாறாக நான் பேசுகிறேன் என்று என்னை நீங்கள் கோபித்துக்கொள்ளவேண்டாம். பகவான் மீது பக்தி கொண்டிருப்பவர்கள் தவறு செய்யமாட்டார்கள். என்னால் உங்களுக்கு இழுக்கொன்றும் வந்துவிடாது."

இதைக் கேட்ட அரசன் ஒன்றும் சொல்லாமல் அரண்மனைக்குத் திரும்பிவிட்டான். ஆனால் மீராபாயைப்பற்றிய பழிச்சொற்கள் அவன் காதுக்கு வந்து கொண்டே இருந்தன. அப்பழிச் சொற்களை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தன் மனைவியை வரவழைத்து "நம் குழந்தை மீராவைப்பற்றி ஊரார் கேவலமாகப் பேசி வருகிறார்கள். பேச்சை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மீரா என் பேச்சைக் கேட்பதாக இல்லை. மீரா உயிருடன் இருக்கும் வரையில் பழிச்சொல் வந்தே தீரும். எனவே அவள் இருப்பதைவிட இறந்தொழிவதே மேல் என்று நினைக்கின்றேன். அவளுக்கு விஷம் தந்து இவ்வுலகை விட்டு அவளை அனுப்பி விடு" என்று கோபத்தோடு கூறினான். கணவனின் கோபமொழிகளைக் கேட்ட மதிமுகி ஓவென்று அழுது புலம்பியதாவது: "மீரா! உன்னைப் பெறுவதற்கு நான் எவ்வளவோ நோன்புகள் நோற்றேன். தவம் புரிந்து உன்னைப் பெற்றெடுத்தேன். கண்ணை இமை காப்பது போன்று உன்னைக் காத்து வந்தேன். உன் மழலைச் சொல்கேட்டு இன்புற்ற காலம் உண்டு. அழகிலும், கல்வியிலும், புத்திக் கூர்மையிலும் எல்லாரைக் காட்டிலும் நீ மிக்கவள். உனக்கேற்ற நம்பியைக் கணவனாகப் பெற்று இன்ப வாழ்க்கை வாழுவதைக் கண் குளிரக் காண நினைத்தேன். உன்னை விஷங் கொடுத்துக் கொன்று விட்டுப் பூமிக்குப் பாரமாக நான் இருந்து என்ன பயன்? பத்துமாதம் உன்னைச் சுமந்து பெற்ற நான் உன்னை எவ்வாறு கொல்வேன்? ஈசா! இது என்ன சோதனை! என் கணவன் எனக்கு இத்தகைய கட்டளை இடலாமா? என் உயிர் போய்விடக் கூடாதா?"

இதைக்கேட்ட அரசன் பூநாயகன் "பிரியே! நீ பிரலாபித்துப் பயனில்லை. நீ நான் சொல்கின்றபடி மீராவுக்கு விஷம் கொடுத்துக் கொல்லவேண்டும். இல்லாவிட்டால் நான் தற்கொலை செய்து கொள்வேன். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று நிகழவேண்டும். நீ என்ன சொல்லுகின்றாய்?" என்று கேட்டான்.

"நாதா! பதிவிரதைகள் பர்த்தாவின் வார்த்தையை மறுக்க மாட்டார்கள். பர்த்தாவின் கட்டளையை நிறைவேற்றுவது பதிவிரதைகளின் கடமையாகும். எனவே நான் உங்கள் கட்டளையை நிறைவேற்றி வைக்கின்றேன்" என்று மதிமுகி தன் கணவனிடம் கூறி விட்டு அன்றிரவு தனது அறையில் உறக்கமின்றித் துயரப்பட்டுக் கொண்டிருந்தாள். அச்சமயம் "பெண்ணே! நீ சிறிதும் அஞ்ச வேண்டாம். உன் கணவன் சொற்படி மீராவுக்கு விஷத்தைக் கொடு. அவளுக்கு ஒரு தீங்கும்

நேரிடாது." என்ற அசரீரி ஒன்றைக் கேட்டாள். மதிமுகி ஒருவாறு தேறுதல் அடைந்தாள். அடுத்த நாள் காலை ஒரு கிண்ணத்தில் விஷம் கலந்த பானத்தை எடுத்துக்கொண்டு மகளிடம் முகவாட்டத்துடன் சென்றாள். தாயின் முகவாட்டத்தைக் கண்ட மீரா அவளுடைய துக்கத்துக்குக் காரணத்தைத் தெரிவிக்கும்படி கேட்டாள், "என் அருமைக் குழந்தாய்! நீ கன்னிப் பெண்ணாக இருந்துகொண்டு அந்நிய புருஷர்களாகிய பாகவதர்களுடன் தாராளமாகப் பழகி வருகின்றாய். பாமர ஜனங்கள் உன் நடத்தை மீது சந்தேகம் கொண்டு தூற்றி வருகின்றார்கள். உன் தந்தை அதைக் கேட்டுத் தன் வம்சத்திற்கே அவமானம் வந்துவிட்டதாக எண்ணி உனக்கு விஷம் கொடுக்குமாறு எனக்குக் கட்டளை இட்டுள்ளார். அவருடைய கட்டளையை நிறைவேற்ற உன்னைக் கொல்ல விஷம் கொண்டு வந்துள்ளேன். நான் உனக்கு விஷம் தராவிட்டால் அவர் தற்கொலை செய்து கொள்வார். எனவே உன்னுடைய சாவுக்கோ, அவருடைய சாவுக்கோ நான் காரணமாக இருந்தாக வேண்டும். இந்தச் சங்கட நிலையிலிருந்து தப்புவதற்கு ஒரு வழி தான் உண்டு. நீ ஒரு ராஜகுமாரனை மணந்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்தச் சம்மதிப்பாயானால் இந்த இக்கட்டான நிலையிலிருந்து நாம் மீளலாம்" என்று மதிமுகி கூறினாள்.

"அம்மையே! பெற்றோர்களாகிய நீங்கள் எனக்கு நற்போதனை செய்து நல்வழி காட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் எம்பெருமானைப் பர்த்தாவாக என் மனதில் வரித்து விட்டேன். அவ்வெண்ணம் என் மனதில் தோன்றிய அக்கணமே அவர் எனக்கு நாயகராகவும் நான் அவருக்கு உரியவளாகவும் ஆகிவிட்டோம். எனவே வேறொரு புருடனை விவாகம் செய்துகொள்ளத் தாங்களும், தந்தையும் என்னைத் தூண்டுவது நல்வழி ஆகுமா? இன்னொருவரை மணந்து உங்களை மகிழ்வித்து உயிர் வாழ்வதைக் காட்டிலும் பரமனையே கணவராக நினைத்து உயிர்விடுவது நலம். ஆகையால் தாயே! நீங்கள் கவலைப்படவேண்டாம். விஷத்தை என்னிடம் தாருங்கள். நீங்கள் உங்களுடைய கணவரின் கட்டளையை நிறைவேற்றி வையுங்கள்." இங்ஙனம் கூறிப் பரம்பொருளைப் பிரார்த்திக்கலானாள். "கருணைக் கடலே! கமலக் கண்ணா! மூவுலகையும் காக்கும் தயாபரனே! நான் உன்னைக் கணவனாக மானசீகமாக ஏற்றுக்கொண்டதை நீ அறியாயோ? இன்னும் ஏன் என் விருப்பத்தை நிறைவேற்றாது இருக்கின்றாய். உனக்கும் உன் பிராட்டிகளாகிய ருக்மணி, சத்தியபாமா ஆகியோருக்கும் பாதசேவை செய்வதையே பாக்கியமாக நினைக்கின்றேன். ஆகையால் மேலும் தயங்காது என்னை வந்து ஆட்கொள்வாய்." தாயை நோக்கி அவள் பகர்ந்ததாவது: "தாயே! நீங்கள் வருந்தாதீர்கள். பகவான் பக்தர்களை ரட்சிப்பார். அவர் பக்தர்களைச் சோதிப்பதற்காகப் பக்தர்களுக்குப் பல இன்னல்களை உண்டாக்குகின்றார். அவற்றைப் பொருட்படுத்தாது பகவானிடம் பக்தி செலுத்துபவர்கள் அவருடைய அருளைப்பெறுகின்றார்கள். எனக்கு எத்தகைய இன்னல்கள் வந்தாலும் அவரிடம் பக்திசெய்வதினின்றும் நான்பிறழமாட்டேன்." இங்ஙனம் கூறித் தாயிடமிருந்து விஷத்தை வாங்கிக்கொண்டாள். "கண்ணா! உன் கமலத் திருவடிகளைப் பற்றிக் கொள்கின்றேன். உன் திருநாமத்தைப் பக்தி சிரத்தையுடன் உச்சரிப்பவர்களுக்குப் பாவங்களெல்லாம் நசிக்கின்றன. அழிவற்ற, ஆதி அந்தமற்ற உன்னைச் சிந்திக்கிறேன். உன்னைத் தஞ்சமடைகின்றேன். என்னை ஆட்கொள்வாயாக" என்று கண்ணனை நினைத்துப் பிரார்த்தித்த வண்ணம் மீராபாய் விஷத்தை அருந்தினாள். மயக்கமடைந்து கீழே விழுந்தாள்.

மீராபாய் வழிபட்டு வந்த கோபாலகிருஷ்ண விக்ரகத்தின் மேனி முழுவதும் அப்பொழுது கறுத்ததை அங்குள்ளவர்கள் பார்த்துப் பீதியடைந்தனர். இதை அரசனுக்கும் தெரிவித்தனர். அரசன் கன்னிகா மாடத்துக்கு ஓடி வந்தான். கிருஷ்ணவிக்ரகத்தின் மேனி முழுவதும் கறுத்திருந்ததைப் பார்த்தான். தன் புதல்வி மீராவிஷம் அருந்தியதுதான் இதற்குக் காரணம் என்பதை அறிந்து கொண்டான். மீராபாயும், பகவானும் வெவ்வேறானவர்கள் அல்லர் என்பதை அறிந்தான். சிறிது நேரத்திற்குள் மீராபாய் மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்தாள். அரசன் தன் மகளிடம் நடந்து கொண்ட குரூரமான செயலைக் குறித்து வருந்தினான். தன்னை

மன்னிக்கும்படி மகளை வேண்டிக் கொண்டான். செய்தி ஊரெங்கும் பரவியது. ஊர் மக்கள் இவ்வதிசயத்தைக் காண அங்குக் கூடி விட்டனர். "குழந்தாய்! உன் பெருமையை உணராது உன்னை இகழ்ந்தேன். உன்னைக் கொல்ல விஷம் கொடுக்கும்படி உன் தாய்க்குக் கட்டளை இட்டேன். உனக்கு விஷம்கொடுப்பதன்மூலம் பகவானுக்கே விஷத்தைக் கொடுத்து அவர் மேனியை விகாரமாக்கும் பாபத்துக்கு ஆளானேன். என் முன்னோர்கள் ஆராதித்து வந்த தங்க விக்கிரகத்தை இந்நிலையில் காண என் மனம் சகிக்கவில்லை. கண்ணனின் விக்கிரகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு நீதான் உபாயம் செய்தாகவேண்டும்'' என்று மீராபாயை அரசன் பிரார்த்தித்துக்கொண்டான்.

''பரந்தாமா! என்பொருட்டுத் தேவரீர் விஷத்தைப் பருகித் தேஜோமயமான சொரூபத்தைக் கெடுத்துக்கொண்டீர். தேவரீருடைய தேஜோமயமான திவ்யரூபத்தைக் கண்டு தரிசிக்கப் பக்தர்கள் விரும்புகிறார்கள். உங்கள் மேனி இத்தகைய விகாரநிலை அடைவதற்கு நான் காரணம் என்பதை அறியும் பக்தர்கள் என்னைப் பழிப்பார்களன்றோ? எனக்கு அப்பழி வராமலிருக்கத் தேவரீர் தங்கள் மேனியை முன்போல் பிரகாசமாக மாற்றிக்கொள்ள வேண்டுகின்றேன். தேவரீரிடத்து நான் கொண்டுள்ள பக்தியையும், அடியவளிடம் தேவரீர் கொண்டுள்ள கிருபா கடாட்சத்தையும் இச்செயலின்மூலம் உலகத்தவர்களுக்கு நிரூபித்துக் காட்டிவிட்டீர்கள். இனி என் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்துத் தங்கள் திருமேனியைப் பழைய நிலைக்குத் திருத்தி அமையுங்கள்'' என்றாள்.

கண்ணனுடைய சொர்ணவிக்ரகம் பழைய நிலைக்கு வந்தது. இதை அங்குக் கூடியிருந்த அனைவரும் கண்ணுற்றுப் பெருவியப்பு அடைந்தனர். அக்கணம் முதல் மீராபாயை அவர்கள் தெய்வமாகக் கொண்டாடினார்கள். மீராபாயைப்பற்றி அவதூறாகப் பேசிவந்த பாமரர்களும் மீராபாயை அணுகித் தங்களை மன்னித்தருளுமாறு வேண்டிக்கொண்டார்கள். தந்தை பூநாயகன் சிறந்த பக்தன் ஆனான். தாய் மதிமுகியும் கண்ணனிடம் பக்தி பூண்டாள். அனைவரும் மீராபாயுடன் சேர்ந்துகொண்டு பகவந்நாம சங்கீர்த்தனம் செய்வதில் ஈடுபட்டனர். மீராபாய் எப்போதும்போல் கண்ணனுடைய விக்கிரகத்தைப் பூஜித்து வந்தாள். பக்தர்களை அன்புடன் உபசரித்து அவர்களுக்குப் பணிவிடைசெய்வதில் மகிழ்ச்சி அடைந்தாள். மீராபாயின் பக்தியானது நாட்டுமக்கள் அனைவரையும் கவர்ந்தது.

மீராபாய் உலகுக்குச் செய்ய வேண்டிய கடமை முடிந்ததும் ஸ்ரீ கண்ணபிரான் யாவரும் காண மீராபாய்க்குக் காட்சி தந்து அவளை ஆட்கொண்டார். மீராபாய்க்குக் கிடைத்த பெரும் பேற்றைத் தந்தை உணர்ந்து பெருமகிழ்ச்சி அடைந்தார். உதயபுரத்தில் ஒரு கோயில் கட்டி அதில் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும், மீராபாய்க்கும் விக்கிரகங்கள் செய்து பிரதிஷ்டை செய்தார். நித்திய பூஜை நடத்துவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்தார். தானும் தன் பத்தினி மதிமுகியுடன் பகவந்நாமஸ்மரணை செய்வதிலும், சத்காரியங்கள் செய்வதிலும் ஈடுபட்டுப் பெரு வாழ்வு வாழ்ந்து வந்தான். மீராபாய் மக்களுக்குத் தெய்வமானாள்.

பக்தியுடன் வாழ்கின்ற மக்கள் தங்கள் வாழ்க்கையின் மூலம் தங்களுக்கும், உலகுக்கும் பெரு நலன் விளைவித்து வருகிறார்கள். பக்தி மனதிலுள்ள மாசுகளை அகற்றுகிறது. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும்படி பக்தி மனதைத் தூண்டுகிறது. அனைத்து உயிர்களுக்கும் தொண்டு புரியும்படி பக்தி தூண்டி வருகிறது. ஆணவ அகங்காரத்தை மனதிலிருந்து பக்தி அகற்றி வைக்கிறது. எவ்வுயிர்களையும் வெறுக்காது எல்லா உயிர்களிடத்தும் நல்லிணக்கம் வைக்கும்படி பக்தி தூண்டி வருகிறது. பக்தியின் மூலம் பகவானை வசப்படுத்துவது எளிதாகிறது. இகழ்ச்சியையும், புகழ்ச்சியையும் பொருள்படுத்தாது முழு மனதையும் பகவானிடத்துச் செலுத்துதல் மூலம் பகவானைப் பெற்று விடலாம் என்பதை மீராபாயின் சரிதம் நமக்குக் காட்டித்தருகிறது. பக்திமதி மீராவின் சிரத்தை நமக்கும் ஏற்படுவதாகுக. உள்ளம் தூய்மை அடைய மீராபாய் வைத்திருந்த உண்மையான பக்தி நம் உள்ளத்திலும் உதிப்பதாகுக. (முற்றும்)

ஞான வெட்டியான் - 16

கோயிலுக்குள் கக்கூஸ் கட்டலாமா?

திருவண்ணுமலையில் கார்த்திகை தீப மகோத்சவத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்து கூடுகிருர்கள். அவர்களில் பலரும் கோயிலுக்குள்ளேயே வெட்டவெளியில் அல்லும் பகலும் தங்கியிருக்கின்றனர். அன்னவர்களின் குழந்தைகள் ஆங்காங்கு மலஜலம் கழிக்கின்றனர். கோயிலுக்கு உள்ளும் புறமும் நடக்கின்றவர்களுக்குப் பகல் வேளையில் காலில் அழுக்குப்படியாது செல்வது சாத்தியமாகிறது. ஆனால் இரவு நேரங்களில் அப்படிச் செல்வது சாத்தியப்படுவதில்லை. பலபேர் பாதையில் குழந்தைகள் செய்திருக்கும் அசுசியைப் பொருள்படுத்தாது செல்வது சர்வசாதாரணம். ஆசாரத்துக்குப்பங்கமாயுள்ள இப்பழக்க வழக்கம் சர்வசாதாரணமாக இருந்து வருகிறது.

மற்று முதியவர்கள் அப்பெரிய கோயிலின் மூலைமுடுக்குகளில் சென்று மலஜலம் கழிப்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது.

இதற்கிடையில் கோயிலுக்குள் கக்கூஸ் கட்டலாகாது என்னும் தடை ஏற்பட்டுள்ளது. மற்று இக்காலத்திய கக்கூஸ் முறையோ பாராட்டுவதற்குரிய நல்ல பாங்கில் அமைந்திருக்கிறது. இம்முறையைக் கையாண்டால் கோயில் முழுதும் துப்புரவாக இருப்பது திண்ணம். ஆயினும் ஐதிகம் அதற்கு இடம் தருவதில்லை. இப்பொழுது பழக்கத்திலிருந்து வரும் குறைநிலைகளை எண்ணிப் பார்ப்பார் இல்லை. ஏதோ ஒரு போக்கில் நம்மவர்கள் சதாசாரத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கின்றனர் என்னும் நம்பிக்கையில் ஊறியவர்களாக நாம் இருந்து வருகிறோம்.

நம் நாட்டுப் பழக்க வழக்கம் இவ்வாறிருக்க இலங்கையிலே கதிர் காமத்தில் விழாக் காலங்களில் அமுலிலிருந்து வரும் நடை முறையைக் கவனத்துக்குக்கொண்டு வருவது அவசியமாகிறது. காலமெல்லாம் பயன்படுத்துவதற்கான நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள சுத்தமான கக்கூஸ்கள் ஆங்காங்கு அமைந்திருப்பதற்கிடையில் விழாக்காலத்துக்காகவென்றும், சுத்தமான கக்கூஸ்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டாரம் முழுதையும் மலஜலம் கழிக்காது வைத்திருப்பது தேவாராதனைக்கு நிகர் என்னும் கொள்கை கதிர்காமம் முருகன் கோயிலில் ஆழ்ந்து பதிந்திருக்கிறது. அல்லும் பகலும் போலீஸ்காரர்கள் சிரத்தையோடு காவல் காத்து வருகிருர்கள். நள்ளிரவில் வெட்ட வெளியில் ஏதேனும் ஓர் இடத்தில் மலம் ஜலம் கழிக்க முயன்ருல் அக்கணமே போலீஸ்காரன் வருகிருன். கோயில் சுற்றுப்புறம் முழுதையும் சுத்தமாக வைத்திருப்பது கடவுள் வழிபாட்டின் ஒரு பகுதி என்று அவன் கண்டிப்பாகவும் ஆனால் இன்சொல் கூறும் முறையிலும் தெரிவிக்கிருன். அங்கு வருகிற யாத்திரை வாசிகளுக்குச் சதாசாரத்தைப் பற்றிய நல்லொழுக்கம் புகட்டும் பொறுப்பை இலங்கைப் போலீஸார் கையாண்டு வருகின்றனர்.

ஆன்மீகத்துறையில் தலைசிறந்த நாடென விளங்கும் நம் நாட்டின் போக்கு எத்தகையது; பக்கத்தில் கையளவு விஸ்தீர்ணம் படைத்துள்ள இலங்கைத் தீவின் போக்கு எத்தகையது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தூய்மைதான் கடவுள் என்பதை நாம் உணர வேண்டும். புறத்தூய்மை அகத்தூய்மை இல்லாது கடவுளை நாம் அணுக முடியாது. உடலையும் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் கடவுள் வழிபாட்டில் ஒரு பகுதியாகின்றது. ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்கள் தேங்காய்ச் சில்லைகளையும் பழத்தோல்களையும் கண்ட இடத்தில் எறிவது கடவுள் வழிபாடு ஆகாது. குப்பை கூளங்களை அதற்காக வைக்கப்பட்டிருக்கும் தொட்டிகளில்தான் போடவேண்டும். ஆலய நிர்வாகிகளும் குப்பை கூளங்களைப் போடுதற்குத் தொட்டிகளை ஆங்காங்கு அமைத்து வைத்திருக்க வேண்டும்.

கோயில்களில் கக்கூஸ்கள் அமைத்து மலம் ஜலம் கழிப்பதற்கு அவற்றைப் பயன்படுத்துவதோடு சுத்தமாக வைத்துக்கொள்ளக் கற்றுக்கொள்வது தேவாராதனைக்கு நிகர் என்பதை நம்மவர்கள் உணர்வார்களானல் ஆன்மீகத் துறையிலும், லௌகீகத்திலும் நாம் முன்னேற்றமடைந்தவர்களாவோம்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

154. அமோघ: அமோக: வீண் போகாத செயலை உடையவர்.

உயிர்களனைத்தும் பலப்பல செயல்களில் காலமெல்லாம் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் அச்செயல்கள் யாவும் பயன்படும் பாங்குடையவைகளாக அமைவதில்லை. கட்டிவைக்கப் பட்டிருக்கும் பசுவின் கன்று ஒன்று தன்போக்கில் ஓடமுயலுகிறது. ஆனால் அம் முயற்சி பயனற்றதாய்ப் போகிறது. மானுடன் ஒருவன் தான் விரும்புகிறதை விரும்பியவாறு பெற முயலுகிறான். அவன் முயற்சியில் பெரும்பகுதி வீண் முயற்சியாக முடிவடைகின்றது. பரமன் செயல் அத்தகையதன்று. முயற்சியற்றவன் போன்று வெறுமனே வைகுண்டத்தில் வீற்றிருப்பவனாகத் தென்படுகின்றான. அதற்கிடையில் அண்டமெங்கும் நிகழுகின்ற செயல்கள் அனைத்தும் அவனுடைய ஆணைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன. தன்னுடைய இச்சா சுதந்தரத்தை ஒதுக்கி வைத்துவிட்டுப் பரமனைச் சார்ந்திருக்கும் பக்தன் ஒருவன் வீண் பொழுது போக்குவதில்லை. அவன் புரிகின்ற சிறிய செயல் பெரிய செயல் ஆகிய யாவும் நல்ல பாங்கில் நலன் தருகின்றன. பரமன் செயலுக்குக் கருவியாயிருப்பது பக்தன் பெறுகிற பேறு ஆகும். எனவே அண்டம் எங்கும் ஓயாது நிகழ்ந்து வருகின்ற செயல்கள் யாவும் பகவானுக்குரிய நல்ல செயல்களாம்.

155. ஶுசி: சுசி: தூய்மையே வடிவெடுத்திருப்பவன்.

அண்டம் முழுதையும் ஆராய்ந்து பார்த்தால் அதன்கண் இலங்குகின்ற மகிமையொன்று தெற்றென வெளியாகிறது. உயிர் வாழும் ஜந்துக்கள் தங்களுடைய வாழ்வின் விளைவாக இயற்கையை மலினப்படுத்துகின்றன. ஓயாது சுவாசிப்பதன் வாயிலாகக் காற்றை நச்சுக்காற்றாக உயிர்கள் பாழ்படுத்துகின்றன. ஆனால் அந்த நச்சுக் காற்றானது தன்னைத்தானே தூயதாக்கிக் கொள்ளுகிறது. பருகுகின்ற நீரை உடல் படைத்திருக்கும் ஜந்துக்கள் மூத்திரமாகக் கழிக்கின்றன. அதை ஆவியாகமாற்றித் தூய மழைநீராக உலகுக்கு வழங்குவது இயற்கையின் சீரிய பாங்கு ஆகிறது. அமிர்த சொரூபமாகிய உணவைப் புசித்து உயிர் வகைகள் உடலைப் பேணுகின்றன. உண்ட உணவில் அவைகளுக்குப் பயன் படாதவைகளை மலமாக வெளிப்படுத்துகின்றன. பின்பு மண்மயமாயுள்ள பரமன் அம்மலத்தைத் தூயதாகத் திருத்தியமைத்துத் தன் இயல்பைக் காத்து வருகிறான். இங்ஙனம் இத்தொல்லுலகமானது யாண்டும் தெளிந்த நிலையிலேயே இருந்து வருகிறது இனி உலகம் வேறு பரமன் வேறு அன்று. பரமனே இயற்கையாக இலங்குகிறான். அத்தகைய இயற்கையின் தூய்மை பரமனது மகிமையாம். ஆதலால் அவன் சுச: யாண்டும் தூய்மையாயிருப்பவன் எனப் போற்றிப் பாராட்டப்படுகிறான்.

156. ऊर्जित: ஊர்ஜித: வலிமை மிகப் படைத்தவன்.

இயற்கையை ஆராய்ந்து பார்த்தால் அதனிடத்துள்ள வலிவு ஆனது இரண்டு விதங்களில் வெளியாகிறது. வலிய வந்து வாய்க்கின்ற இன்னல்களைச் சமாளிப்பதன் வாயிலாகத் தன் வலிவை வெளிப்படுத்துவது ஒரு பாங்கு. கேட்டை ஆக்ரமித்து அதனை நலனாகத் திருத்தியமைப்பது மற்றொரு பாங்கு. மானுட வடிவெடுத்துள்ள கிருஷ்ணன் இந்த இரண்டுவிதப் பாங்குகளிலும் தன் திறமையை வெளிப்படுத்தினான். வயதில் சிறியவனாயிருந்த கோபால கிருஷ்ணன் ஆற்றல் மிகப்படைத்திருந்த கம்சனை ஒழித்துத் தள்ளியது அவனுக்குச் சொந்தமாயிருந்த ஆக்கிரமிப்புக்கு அறிகுறியாகிறது. பிறகு ஜராசந்தன் பதினெட்டுத்தடவை துவாரகையின்மீது படையெடுத்து வந்தான். அவன் தாக்க வந்த ஒவ்வொருதடவையிலும் தோல்வியடைந்துபோனான். அவனைத் தோற்கடிக்கக் கிருஷ்ணன் தம்முடைய அமானுஷ்ய சக்தியை அல்லது தெய்வத்தன்மையைக் கையாளவில்லை. வல்லமை வாய்ந்த மனிதனுடைய நிலையிலிருந்துகொண்டே எதிரியை விரட்டியோட்டினான். மக்கள் கண்ணனிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பெரியபாடம் ஒன்று இதினின்று வெளியாகிறது. உயிர்களனைத்திடத்தும் வெவ்வேறு விதங்களில் இறைவனுடைய வல்லமை வந்தமைந்திருக்கிறது.

அப்படி அமைந்துள்ள வல்லமையை ஒவ்வோர் உயிரும் தன் போக்கில் பயன்படுத்துமாகில் அது வாழ்வில் முன்னேற்றமடைவது திண்ணம். இந்த அரிய பாடத்தைக் கிருஷ்ணபரமாத்மா எடுத்திருந்த மானுட ஜன்மத்தை நன்கு பயன்படுத்தியதன் வாயிலாக உலகுக்கு 'ஊக்கமது கைவிடேல்' என்னும் பாடத்தைப் புகட்டியுள்ளான்.

157. अतीन्द्रः அதீந்த்ரா: இந்திரனுக்கு மிக்கான்.

இந்திரன் என்னும் பதம் இயற்கையின்கண் உள்ள திறமையைக் குறிக்கிறது. தேவேந்திரன் என்று பகருமிடத்து அவன் தேவர்களுக்கெல்லாம் தலைவன் ஆகின்றான். தேவர்கள் என்னும் சொல் இந்திரியங்களைக் குறிக்கின்றது. இந்திரியங்களுக்குத் தலைவனயிருப்பது மனது ஆகிறது. அப்பொழுது தேவர்களுக்கெல்லாம் தலைவனக இருக்கின்ற தேவேந்திரன் என்னும் சொல் இந்திரியங்களுக்கெல்லாம் தலைவனக இருக்கின்ற மனதைக் குறிக்கின்றது. அந்நிலையில் மனதுக்கு மிக்கான் பரமன் என்பது வெளியாகிறது.

பிரபஞ்சத்தின் நடைமுறைகளனைத்தும் மனதின் செயல் எனலாம். மனது செயலற்று ஓய்வு எடுக்குமிடத்துப் பிரபஞ்சமே மறைந்து பட்டுப்போகிறது. அயர்ந்த உறக்கம் இதற்குச் சான்றாகிறது. வல்லமை வாய்ந்த மனதை இறைவன் கட்டியாள்கின்றான். அத்தகைய இறைவனை வழுத்துகின்ற யோகியர்கள் அனைவரும் தங்கள் மனதை இறைவனிடம் சமர்ப்பிக்கின்றனர். அந்த அரிய செயலின் வாயிலாக அவர்கள் சித்தபுருஷர்கள் ஆகின்றார்கள்.

மனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாகச் செயல்படும்பொழுது இப்பிரபஞ்சக் காட்சி இருக்கிறது. மனது பஞ்சேந்திரியங்களிலிருந்து பிரிந்து தான்மட்டும் செயல்புரியும்பொழுது கனவுலகத்தில் இருக்கிறோம். மனது ஒடுங்கிச் செயலற்று இருக்கும்போது ஒன்றையும் அறியாத ஜடநிலையில் இருக்கிறோம். மனதை வென்ற சித்த புருஷர்கள் இம்மூன்று நிலைக்கும் அப்பாலுள்ள துரியத்திலிருக்கிறார்கள்.

158. संग्रहः சங்க்ரஹ: ஊழிக்காலத்தில் அனைத்தையும் எடுத்து விழுங்குபவர்.

பஞ்சகிருத்தியங்களாகிய படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தையும் பரம்பொருள் விளையாட்டாகச் செய்கிறார். அந்த ஐந்தனுள் துடைத்தல் முக்கிய இடம் பெறுகிறது. அதை முறையாக நிறைவேற்றாவிட்டால் இம்மண்ணுலகம் அதன் புதுமையை இழந்துவிடும். பழையன கழிதல் புதியன புகுதல் இயற்கையின் பெருந்திட்டமாம். மாறாத இந்தத் திட்டம் முழுமுதற் பொருளாகிய இறைவனிடம் சமஷ்டியாகவும் உயிர்களிடத்து வியஷ்டியாகவும் நடைபெற்று வருகிறது. வியஷ்டியாகிய மனிதனிடத்து இது எப்படி நிகழுகிறது என்று பார்ப்போம். ஒரு நாளில் ஒரு தடவையாவது அவன் அயர்ந்து உறங்குகின்றான். அச் சிறியவேளையில் அவன் கண்டுகளித்து வருகின்ற பிரபஞ்ச வாழ்வனைத்தையும் அவன் தன்னகத்தே கரந்தெடுத்துக்கொள்கின்றான். அச்செயலில் அவன் அடையும் ஆனந்தம் ஒப்புயர்வு அற்றது. மீண்டும் அவன் விழிப்பு நிலைக்கு வருகின்றபொழுது தன்னகத்து ஒடுங்கியிருந்த அனைத்தையும் அவன் மறுபடியும் தோற்றத்திற்குக் கொண்டு வருகின்றான். உறங்குதற்கு முன்பு அவன் படைத்திருந்த பாங்கை விட விழித்தெழுந்தான பிறகு அடைகின்ற பாங்கில் புதுமையும் எழிலும் மிளிர்கின்றன. இக்கோட்பாடு அகிலாண்ட நாயகனுக்கும் பொதுவானதேயாம். அண்டங்களனைத்தையும் தாமுள்வாக்கி நெடுங்காலத்துக்குப் பிறகு அவைகளைத் துடைத்தலின் வாயிலாக இறைவன் தன் எழிலை நன்கு காத்து வருகின்றான். அத்தகைய பரமனுடைய பெரிய திட்டத்தில் பங்குகொள்ளுதல் மனிதனுடைய கடமையாகிறது. ஆதலால் விழிப்பு நிலையையும் உறக்க நிலையையும் நன்றாகப் பயன்படுத்துவது மனிதன் இறைவனுக்குப் பண்ணும் வழிபாடுகளுள் சிறந்த தொன்றாகத் திகழ்ந்து வருகிறது. அண்டகோடிகளனைத்தையும் அவன் எடுத்து விழுங்கிய நிலை எத்தகையதென்பதை நாள்தோறும் மனிதன் அடைந்து வருகின்ற கனவற்ற உறக்கத்தினின்று அறிந்துகொள்ளலாம். விழிப்புநிலையில் சிந்தனை, சொல், செயல் ஆகிய முக்கரணங்களாலும் மனிதன் கடவுள் வழிபாடு செய்து வரவேண்டியது மனிதனது தலையாய கடமை.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (454) மணக்கோலத்தில் இருக்கும் பொழுது சம்ஹார தெய்வமாகிய ருத்திரன் அல்லது சிவனை வணங்குதல் முறையா? அவனை வணங்குவதால் அவன் அழிவு தெய்வமாய் இருப்பதால் வீட்டில் சச்சரவு நேருமல்லவா?

மணம்புரிந்துகொள்ளுதலில் இரண்டு பாங்குகள் உள. ஒன்று காமநோய்க்கு வசப்பட்டது. மற்றது அக்காம நோயை இறைவனுடைய வழிபாடாகக் கருதி அதற்கேற்றபடி அதைப் பயன்படுத்துவதாம். காமம் படைக்கும் கடவுளின் முக்கியமான செயல். காத்தல் காக்கும் கடவுளின் செயல். துடைத்தல் சிவன் செயல். இம்மூன்றனுள் பிறவிப் பிணியைப் பெருக்குவது படைத்தல் தெய்வமாகிய பிரம்ம தேவனுடைய செயலாம். பிறப்பைத் தாண்டி பரமனுக்குரிய பரமபதத்தை அடைவது மானுட ஜன்மத்தின் முக்கியமான குறிக்கோள். ஆதலால்தான் படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவனை வழுத்தலாகாது என்னும் கோட்பாடு வந்துள்ளது. நம் நாடு முழுதும் அலசி ஆராய்ந்து பார்த்தால் சம்ஹாரத் தொழில் புரிகின்ற சங்கரனுக்கும், மக்களை நிலவுலகில் வைத்து நல்ல பாங்கில் காத்து வருகின்ற நாராயணனுக்கும் எங்கும் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன பிரம்ம தேவனுக்கோ பெயரளவில் இரண்டு மூன்று இடங்களில் மட்டும் கோயில்கள் கட்டி வைத்திருக்கிறார்கள்.

பிரம்ம தேவனை வழுத்தலாகாது என்னும் லட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு மக்களில் பெரும்பான்மையோர் அவனைத்தான் வழுத்தி வருகின்றார்கள். ஏனென்றால் காம நோயை வளர்ப்பதும், அதற்குட்பட்ட பாங்கில் வாழ்ந்திருப்பதும் படைத்தல் தெய்வத்தினுடைய வழிபாடாம். அதை மிகைபடக் கையாளுதலால் ஜனத்தொகை பண்டொரு காலத்தில் இருந்ததைவிடப் பன்மடங்கு அதிகமாயுள்ளது. இன்றைய சூழ்நிலையில் வீடு ஒன்றில் பிறப்பு நேர்வதைவிடச் சாவு நேர்வது உத்தமம். வீட்டில் சாவே நேராதிருந்தால் அந்த வீட்டின் கதி என்னாகும் என்பதை மனிதன் எண்ணிப் பார்ப்பதில்லை. ஓயாது நிகழ்ந்து வருகின்ற மரணத்தின் வாயிலாகவே உலகில் புதுமை காத்து வைக்கப்படுகிறது. ஆகையால் மரணத்துக்கு அஞ்சி சிவனை வழிபடாது இருந்தால் வீட்டில் மரணம் நேராது என்பது மௌடிகமானது. சாவுக்கு அஞ்சுபவன் கோழை. ஏதேதோ காரணங்களை முன்னிட்டு அவன் பயந்து சாவது திரும்பத்திரும்ப நிகழ்ந்துகொண்டிருக்கிறது. மரணத்திற்கு அஞ்சாதிருந்து அது தன்னை வந்து தாக்குகிறபொழுது மகிழ்வுடன் அம் மரணத்தை ஏற்றுக்கொள்பவனே வீரன். வீரனுக்கு மரணம் ஒருதடவைதான் வருகிறது. ஆகையினால் நல்ல வீரன் ஒருவன் காமத்தை வெல்லுதல் மூலம் அவனிடத்தில் உள்ள வீரத்தை நன்கு நிலைநாட்டுகிறான். மரணத்தை மகிழ்வுடன் ஏற்பதால் அடுத்த பிறவிக்குரிய வீரியம் என்னும் வித்தை இப்பிறப்பிலேயே பெற்றவனாகிறான்.

மக்கள் எக்காலத்திலும் காமத்துக்கு அடிமைப்படாதிருந்து நல்வாழ்வைக் காக்கும் தெய்வமாகிய விஷ்ணுவையும், பழுதுபட்டுப்போன உடலைத் துடைதது்த் தள்ளுகிற சங்கரனையும் வழுத்திப் பழகுவார்களாக.

கேள்வி: (455) ஸ்ரீ ராமகிருஷ்ண உபதேச மஞ்சரியில் 932வது உபதேசத்திற்கும் 1193வது உபதேசத்திற்கும் முரண்பாடு உள்ளதே? ஒன்றன்படி கடவுளுக்குப் படைக்கிற பாபம் தனக்கே திரும்பிவந்து சேருகிறது. மற்றதின் படி தம் பாபத்தையும் பரமஹம்சதேவர் அம்பிகைக்கு ஒப்படைக்கின்றார். இதில் முரண்பாடு இல்லையா?

இரண்டுக்குமிடையில் முரண்பாடு இருப்பது போன்று தென்படுகிறது. முதலில் நிகழ்ந்த நிகழ்ச்சிப்படி தமது பாபத்தை மட்டும் கிருஷ்ணபரமாத்மாவுக்குப் படைக்கப் பாண்டவர்களுள் மூத்தவன் யுதிஷ்திரன் எண்ணினான். அது பொருந்தாது என்று தம்பி பீமன் எச்சரிக்கை செய்தான். இரண்டாவது நிகழ்ந்த நிசழ்ச்சிப்படி பரமஹம்சதேவர் தம்மிடமிருந்த அனைத்தையும் அம்பிகைக்கு ஒப்படைத்தார். அதைச் சிறிது ஆராய்ந்து பார்த்தால் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைத்தார் எனப் பொருள்படுகிறது. அச்செயலில் உடலில் அடங்கியுள்ள மலமும்

அடங்கப்பெறுகின்றது. அது தோஷமாகாது. மற்று உடலில் அடங்கியுள்ள பொருந்தாத பகுதிகளை அர்ப்பணம் பண்ணினல் அது தனக்குக் கேடாய் வந்து முடியும். தர்மன் பாபத்தை மட்டும் எடுத்துக் கண்ணனுக்கு வழங்க முயன்றது பொருந்தாத செயல். பரமஹம்சர் புரிந்த செயலில் தமது அனைத்தும் அடங்கியிருக்கின்றன. அனைத்தில் புண்ணியங்களே அதிகம். பாபம் என்னும் சொல் உபசாரத்திற்காகச் சொல்லப்பட்டது. ஆக தெய்வத்துக்கு ஏதாவது ஒன்றைமட்டும் படைக்க முயலுகின்றவன் தன்னிடத்திலுள்ள மிக மேலானதையே படைக்கவேண்டும். அப்படியல்லாது தன்னிடத்திலுள்ள அனைத்தையும் ஒப்படைக்கின்றபொழுது அதில் பொல்லாங்கு சிறிது இருக்குமாகில் அது பக்தனுக்குத் தோஷத்தை உண்டுபண்ணது.

கேள்வி: (456) ஆத்மா பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டது. அப்படியானல் ஆத்ம சாந்தி என்பதன் பொருள் என்ன?

ஆத்மா என்னும் சொல் பல படித்தரங்களில் வைத்து உலக நடைமுறையில் கையாளப்படுகிறது. அந்த ஆத்மாவுக்குச் சிறிது அன்னம் போடு என்னும் கூற்றிலே ஆத்மா என்னும் சொல் உடலைக் குறிக்கிறது. ஆத்மஹத்தி பண்ணிக்கொள்ளுதல் என்னும் கூற்றிலே அறிவிலி ஒருவன் உடலைத் தான் என்று கருதி அதைப் பாழ்படுத்தச் செய்கின்ற முயற்சியாம். ஆத்ம சாந்தி என்பதன் பொருள் மனேசாந்தி எனப்பொருள்படுகிறது. ஏனென்றால் ஜீவாத்மன் ஒருவன் உடலின் கூறுகளனைத்தையும் ஆத்மாவின் கூறு எனத் தவறுதலாக எண்ணிக்கொள்வது போன்று மனதில் உண்டாகின்ற இன்ப துன்பங்களை ஆத்மாவுக்குரியன என எண்ணிக்கொள்கிறன். அந்த எண்ணத்தின் படி ஆத்ம சாந்தி என்பதை மனேசாந்தி என்றுதான் பொருள் படுத்திக்கொள்ளவேண்டும். ஆத்மாவோ தனது நிஜநிலையில் பிரபஞ்சத்தின் கூறுகளனைத்துக்கும் அப்பாற்பட்டதாம்.

கேள்வி: (457) கடவுள் வழிபாட்டில் மலர்களை மூர்த்தியின் திருவடியில் வைக்கிறேம். தீபாராதனையின் பொழுது வடிவம் முழுமைக்கும் காட்டுகின்றேம்: இதன் கருத்தென்ன?

மூர்த்தியின் வாயிலாகப் பக்தன் ஒருவன் செய்கின்ற வழிபாடு முழுதும் பரமனுக்குரியது என்று அவன் எண்ணுகிறன். அந்தராத்மாவாயிருந்து அவனுடைய எண்ணத்தை அறிகின்ற பரமன் அந்த எண்ணத்திற்கு அனுமதி தருகிறர். அன்பிற்கு அறிகுறியாகப் பக்தன் ஒருவன் மலர்களை இறைவனுடைய திருவடிகளில் சாத்துகின்றன். மூர்த்தியின் சிரசின் மீது மலர் சாத்துவதை விட அவருடைய திருவடிகளில் சாத்துவது சாலச் சிறந்தது என்பதைப் பக்தன் உணருகின்றன். அத்தகைய உணர்ச்சி ஆமோதிப்பதற்குரியதாம். பிறகு தீபாராதனை பண்ணுகின்ற பொழுது இறைவனுடைய முகவிலாசத்தில் வெளிச்சத்தைக் காட்டி அடுத்தபடியாக அவன் சொரூபம் முழுதும் சுற்றிக் காட்டி முடிவில் அந்த ஞான வெளிச்சம் எல்லையில் அடங்காதது என்பதற்கு அறிகுறியாக அவன் வட்டமிட்டுக் காட்டுகின்றன். ஆக, பக்தியின் வினையும் ஞானத்தின் வினையும் சாதகன் செய்கின்ற வழிபாட்டில் அடங்கியுள்ளன.

கேள்வி (458) இறைவன் பக்தனுக்குத் துன்பம் தருகின்றன். காரணம் என்ன?

சர்வகாலமும் இறைவனையே எண்ணிக்கொண்டு அந்த இறைவனையே சார்ந்திருப்பது பக்தனுடைய பாங்கு ஆகும். அத்தகைய பக்தனுக்கு எக்காரணத்தை முன்னிட்டாவது துன்பம் வந்தால் அத்துன்பத்தைத் துடைத்துத் தள்ளுவதற்கு இறைவனுடன் தான் கொண்டுள்ள இணக்கத்தை அதிகப்படுத்த முயலுகின்றன். அவன் எடுத்துக்கொள்கின்ற அந்த முயற்சியைப் பார்த்துப் பக்தன் பூரிப்படைகின்றன். அதற்குச் சான்றென்று எடுத்துக்கொள்வோம். தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கம் யாண்டும் அன்புமயமானது. சில வேளைகளில் தாய் மறைந்திருந்து சேய்க்கு ஏக்கத்தை உண்டுபண்ணுகிறள். அப்பொழுது குழந்தை அழும் அழுகையில் தாய் பேரின்பமடைகின்றள். இதே செயலைப் பக்தனிடத்தில் செய்து அவனைத் துன்புறுத்தல் மூலம் இறைவன் பரமானந்தமடைகின்றன். பிறகு பக்தனுக்குத் தம் சொருபத்தைக் காட்டியருளுகிறர். இக்கோட்பாட்டையே 'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்குவது போல்' என்கிறர் தாயுமானவர்.

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

('பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[*106* ஆம் பக்கத் தொடர்ச்சி]

மார்ட் டி ஆர்தர்

ஆல்பர்ட் லார்ட் டென்னிசன் என்பவர் சிறந்த ஆங்கிலக் கவிஞர். அவர் கவிதைகள் மிகவும் கருத்தாழம் உள்ளவை. அக்கவிதைகளில் அவர் வீரத்துக்கும் விவேகத்துக்கும் வேண்டியவாறு விளக்கம் கொடுத்திருக்கிறார். 'மார்ட் டி ஆர்தர்' என்ற பாடலில் வீரத்தை விளக்கிப் பாடியுள்ளார். ஒரு சமயம் ஆர்தர் என்ற அரசன் இங்கிலாந்தை ஆண்டு வந்தான். அவனுக்கு வீர மரணம் வந்தபொழுது படகில் இருந்துகொண்டு தன் நண்பன் ஸர் பெடிவர் என்பவரிடம் தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டான். அப் பாடலில் உள்ள ஒரு சிறு பகுதி பத்தாம் வகுப்புக்குப் பாடமாக அமைந்துள்ளது. அதிலுள்ள கருத்தை ஈண்டு ஆராய்வோம்.

வீரசுவர்க்கத்திற்குத் தன்னை அழைத்துப் போகத் தேவதைகள் வாகனம் கொண்டு வந்திருப்பதாக அரசன் ஆர்தர் பூரிப்பு அடைந்தான். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' இயற்கையின் நியதி. இறைவனுடைய திட்டத்தை யார்தான் அறியமுடியும்? "ஒரு திட்டம் எவ்வளவுதான் நல்லதாக இருப்பினும் காலப்போக்கில் அது மாறி அமைய வேண்டும். அது மாறி அமையாது நீண்ட நாள் வழக்கத்தில் இருக்குமானால் அது உலகை மிகவும் பாதிக்கும். எனவே அத்தகைய மாறுதலைக் குறித்து யாரும் கவலைப்படலாகாது. அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். தனக்குத்தானே ஒருவன் சுற்றமும் பகைமையும் ஆகின்றான். பிறர் யாரும் ஒருவனுக்கு இன்பம் அளிக்க முடியாது. ஆகையால் என்னை விட்டுப் பிரிவதைக் குறித்து நீ வருத்தப்படவேண்டாம். உனக்கு நீயே ஆறுதல் சொல்லிக்கொள். இனிமேல் என்னிடமிருந்து நீ என்ன ஆறுதலைப் பெறமுடியும்?

"நான் இவ்வுலக வாழ்க்கையை வாழ்ந்து முடித்தாய்விட்டது. இங்குச் செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் நான் செய்துவிட்டேன். இறைவன் என்னைத் தூய்மைப்படுத்துவாராக! நான் உன்னைவிட்டுப் பிரிந்துவிடுவேன். இனிமேல் என்னுடைய முகத்தை நீ பார்க்க முடியாது. நீ எனக்காக ஒன்று செய்யவேண்டும். என் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தனை செய். பிரார்த்தனையின் வலிமை மிகப் பெரியது. பிரார்த்தனையின் மூலம் எதையும் சாதிக்கலாம். மக்கள் தங்களால் நினைக்கமுடியாததை எல்லாம் பிரார்த்தனையினால் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆகையால் உன் உள்ளத்திலிருந்து பிரார்த்தனையானது வற்றாத நீர் ஊற்றுப் போல் யாண்டும் வந்துகொண்டே இருக்கட்டும். பிரார்த்தனைதான் மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்தி வைக்கின்றது. பிரார்த்தனை செய்யாத மனிதன் அஞ்ஞான வாழ்வில் உழன்று கிடக்கின்றான். விலங்குகள் தெய்வத்தைப்பற்றிய ஞானத்தைப் பெறமுடியாது. ஆகையால் அவைகள் பிரார்த்தனை செய்வதில்லை. மனிதன் தெய்வத்தைப்பற்றிய ஞானத்தைப் பெறமுடியும். ஆகையால் மனிதன் பிரார்த்தனை செய்ய வேண்டும். தன்னுடைய நலனுக்காகவும், உலக நலனுக்காகவும் மனிதன் பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை நம்மை இறைவனோடு இணைத்து வைக்கும் சக்தி ஆகும். உலக பந்தபாசங்களை இரும்புச் சங்கிலி என்று வைத்துக்கொண்டால், பிரார்த்தனையைப் பொன் சங்கிலி என்று வைத்துக்கொள்ளலாம். உலக பந்த பாசம் என்னும் இரும்புச் சங்கிலி உலகத்தோடு பிணைத்து வைத்து நம்மைத் துன்புறுத்துகிறது. பிரார்த்தனை என்னும் பொன் சங்கிலி நம்மை இறைவனின் திருவடிகளில் இணைத்து வைத்துப் பேரின்பத்தைத் தருகிறது. ஆகையால் பிரார்த்தனை செய்ய மறந்துவிடாதே."

"நான் இப்பொழுது உன்னிடமிருந்து விடை பெற்றுக்கொள்கின்றேன். என்னை அழைக்க வந்திருக்கும் தேவதைகளுடன் யான் நீண்ட பயணம் போகப் போகின்றேன். நான் இப்பொழுது ஒரு குழப்பத்தில் இருக்கின்றேன். என் மனதில் ஓர் ஐயம் உள்ளது. நான் வீர

சொர்க்கம் போவேனே, போக மாட்டேனே என்ற ஐயம் இடையிடையே வந்து கொண்டிருக்கிறது. இன்பத்துக்கு ஏதுவான எவிலியான் என்ற தீவுக்கு நான் போக விரும்புகின்றேன். அங்குப் பனி இல்லை; மழை இல்லை; ஆலங்கட்டி இல்லை; புயல் காற்று இல்லை. ஆங்குப் பசும்புல் தரையும், பழத்தோட்டமும் என்னை வரவேற்க இருக்கின்றன. பூப்பந்தல் போட்டது போன்று மரக்கிளைகள் அடர்ந்து நிழல் தந்து வேனிற்காலம் ஆங்குக் குளிர்ச்சியாக இருக்கும். அங்குப் போவேனாகில் என் துன்பங்கள் யாவும் மறையும். அந்த இன்பகரமான இடம் என் உடலில் உள்ள துன்பத்தையும், என் உள்ளத்தினுள் உள்ள துன்பத்தையும் மறக்கச் செய்யும்." இங்ஙனம் ஆர்தர் அரசன் தன் நண்பனிடம் பேசின பேச்சு நமக்குப் பிரார்த்தனையினுடைய மகிமையைத் தெளிவாகவிளக்குகின்றது. வாழ்க்கைக்கு முடிவு ஒரு நாளைக்கு வரும். நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொண்டே சென்றால் மரணத்துக்குப் பின் நாம் செல்லுமிடம் மகிழ்ச்சியாக இருக்கும். ஆர்தர் அரசன் கூறியுள்ள எவிலியான் என்னும் சொர்க்கம் பிரார்த்தனையின் மூலம் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொண்டு வருபவர்களுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது.

விளையாட்டுப் பொம்மைகளும் உலகப்பொருள்களும்:

மேனாட்டுக் கவிஞர் கவன்ட்ரி பாட்மோர் என்பவர் பொம்மைகள் என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் தம் குழந்தையினிடம் அவர் நடந்துகொண்ட விதத்தை வர்ணிக்கின்றார்.

கவிஞருக்கு மகன் ஒருவன் இருந்தான். சிறு குழந்தையாக இருக்கும்பொழுதே அவன் தாயை இழந்துவிட்டான். அவனுடைய கண்கள் சிந்தனையின் ஆழத்தை வெளிப்படுத்துவதாக இருந்தன. அவனுடையபேச்சு அனுபவம் வாய்ந்த அறிவாளியின் பேச்சைப்போல் இருந்தது. ஒரு சமயம் அவனுடைய தந்தையின் உத்தரவை அவன் ஏழுமுறை மீறி நடந்தான். அதனால் கவிஞனுக்குக் கோபம் வந்துவிட்டது. மகன் என்றும்பாராது மகனை அடித்துவிட்டார்; கடுமையாகப் பேசித்தம் மிடமிருந்து ஓட்டிவிட்டார். படுக்கைக்குப் போகுமுன் குழந்தைக்கு முத்தமிடும் தம் நாட்டுப் பழக்கத்தை அன்றைக்குத் தம் மகனிடத்தில் கையாளவில்லை. பையனை அனுப்பிய பிறகு மகன் வருத்தம் அவனுடைய தூக்கத்தைக் கெடுத்திருக்கும் என்று கவிஞர் அஞ்சினர். அவனுடைய படுக்கை அறைக்குச் சென்று அவன் எப்படித் தூங்குகிறான் என்பதைப் பார்த்தார்.

மகன் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய கருமையான கண் இமைகள் கண்ணீரால் நனைந்திருந்தன. தூங்கும்வரையில் அவன் அழுதான் என்பதை அது விளக்கிக் காட்டியது. கவிஞர் அவன் கன்னத்தில் முத்தமிட்டு அவன் கண்ணீரைத் துடைத்தார். கவிஞருடைய கண்களிலிருந்து வந்த நீர் அவருடைய கண்களை நனைத்தது. மகனுடைய படுக்கைக்குப் பக்கத்திலிருந்த மேஜையின்மீது விளையாட்டுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்பொருள்களை எல்லாம் அவன் அம்மேஜையின் மீது வைத்திருந்தது அவனுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதற்கேயாம் என்பதைக் கவிஞர் அறிந்துகொண்டார். அக்காட்சி கவிஞனுடைய உள்ளத்தில் மக்களுடைய அறியாமையை ஞாபகமூட்டியது.

கவிஞன் இறைவனிடம் அழுது புலம்பிப் பிரார்த்தித்ததாவது: "இறைவா! மரணத்துக்கு முன் சுய நினைவு அற்றுக் கிடக்கின்றோம். வாழ்க்கையில் நாங்கள் செய்த குற்றங்கள் உம்மைக் கோபத்துக்குள்ளாக்குவதில்லை. உம்முடைய ஆணைகளை நாங்கள் பல முறை மீறி நடந்துள்ளோம். அவைகளை எல்லாம் நீ மன்னித்துள்ளாய். உன் எல்லையற்ற கருணையை என்னென்று சொல்வது! மரணப் படுக்கையில் இருப்பவர்களைப் பார்த்து "இவர்களுடைய குற்றங்களுக்கு நான் பரிதாபப்படுகிறேன்" என்று மொழிகின்றாய். என்மகன் என் ஆணையை மீறியது போன்று நாங்கள் உம் ஆணையை மீறுகின்றோம். உலகப்பொருள்களைப்பெற்று மகிழ்ந்து நீ கொடுக்கின்ற துன்பமாகிய தண்டனையை, மறந்திருக்க முயல்கின்றோம். சிறுவர்கள் விளையாட்டுப் பொம்மைகள் மூலம் பெறுகின்ற மகிழ்ச்சிபோன்றது நாங்கள் அற்ப உலகப் பொருள்களிடமிருநது பெறுகின்ற மகிழ்ச்சி. இப்பாடத்தை இன்று எனக்கு என் மகனமூலம் புகட்டினாய். இங்ஙனம் கவிஞன் உலக மக்களின் நிலைமையைப் படம்பிடிததுக் காட்டுகிறார். (தொடரும்)

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

பகவான் புத்தரின் வாழ்க்கை மானிட குலத்திற்குச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றது. மானுட வாழ்க்கையின் எல்லாப் படித்தரங்களிலும் சாமான்ய மனிதனைப் போலவே அவர் வாழ்ந்தார். உலக வாழ்க்கையில் என்ன குறை என்பதையும், அதைப் போக்கும் வழியையும் காணக் கடுந்தவம் மேற்கொண்டார். 'அனைத்துத் துன்பத்திற்கும் காரணம் ஆசையே' எனக்கண்டறிந்து, குறையைப் போக்கி, உயர்ந்த ஆன்மீக அனுபவத்தை அடையும் வழியைத் தாமே அனுசரித்து, அனைத்துலகுக்கும் உபதேசம் செய்தார். மானிடன் எய்தக் கூடிய மேலாம் பெருவாழ்வை விளக்கும் வகையான் அவர் வாழ்க்கை அமைகின்றது.

கர்மத்தில் மூழ்கி அஞ்ஞானத்தில் திளைக்கும் ஜீவாத்மாவிற்கும் கர்மபந்தத்தினின்று விடுபட்டுப் பேரானந்தத்தில் திளைக்கும் கர்மயோகிக்கும் இடையே உள்ள வேறுபாட்டை வேதாந்தம் அழகாக விளக்குகின்றது. சாதாரணமாக ஜீவனின் வாழ்க்கைப் போக்கை முடிவு செய்வது அவனுடைய கர்ம வினை ஆகும்; பிராரப்த வினையின்படி அமைகின்ற பிறவியைத் தனதுபரிணாமத்திற்கு ஏற்ப அவன் பயன்படுத்துகின்றான்; ஆயின் அவதார புருஷனின் பிறப்போ கர்மவினை, பரிணாமம் இரண்டையும் பொறுத்தது அன்று. உலக மக்களை நல்வழிப்படுத்த விண்ணுலகில் இருந்து இறங்கி வந்த தெய்வத் திரு உருவே அவதாரம் ஆகும். 'அவ தரதி' என்ற வினைச்சொல் 'இறங்கி வருதல்' எனப் பொருள்படும். மானிட வாழ்வின் லட்சியம் யாது, செந்நெறி யாது என்று நன்கு விளக்க, அவதாரமூர்த்தியாக, மானிட உருவம் தாங்கிப் பரம்பொருள் அருள்செய்கின்றது. கர்மவினையில் சிக்குண்ட, அஞ்ஞான வலையில் அகப்பட்டுள்ள ஜீவனால் இத்தகைய எழுச்சி மிகு உபதேசம் புகட்ட முடியாது. இரும்புத்துகள் அனைத்தையும் ஈர்க்க வேண்டுமாயின் பலமான காந்த சக்தி உள்ள காந்தம் தேவையன்றோ? ஆத்ம ஞானியாகத் திகழும் தவசிரேஷ்டர் மட்டுமே மக்களை ஆன்மீக நெறியில் ஈடுபடுத்த முடியும். சக்தி வாய்ந்த மின்சார டைனமோ போன்றவர் அவதார புருஷர். சமுதாயத்தில் ஆன்மீகப் புத்துணர்ச்சியை எழுப்பும் வல்லமை அவரிடம் நிறைந்திருக்கும். தெய்வீக நியதியை நிலைநாட்டும் பெரிய காரியத்தை அவர் ஆற்றுகின்றார்.

இறைவனின் பெரிய திட்டத்தில் ஒவ்வொரு தேசத்திற்கும் ஒரு பணி இடப்பட்டுள்ளது. பொதுவாக ஆசியாக் கண்டம் சமயத்துறையில் அரும்பணி ஆற்றியுள்ளது. உலகின் நன்மைக்கு எனத் தோன்றிய சமயக்குரவர்கள் அனைவரும் ஆசியாவைச் சேர்ந்தவர்களே. ஏசு கிறிஸ்துவும் அவர்களில் ஒருவர். எங்குத் தேவை ஏற்படுகின்றதோ அங்கு அதற்கு ஏற்றபடி நிவாரணம் கிடைப்பது இயற்கையின் திட்டம். எந்தப் பிரதேசத்தில் ஆன்மீக முன்னேற்றம் அதிகம் பெறமுடியுமோ, அந்த நாடுகளில் அதற்கேற்ற ஆன்மீக வாதிகள் தோன்றினர். எனவே காலத்தின் தேவைக்கு ஏற்ப ஏசுவின் அவதாரமும் நிகழ்ந்தது.

ஒரு அவதார புருஷரின் தனிச் சிறப்பை ஐந்து லட்சணங்களில் உணரலாம். அவை தூய்மை (purity), சாதனை (practice) தத்துவம் (principle), ஆன்மீக சக்தி (power) காக்கும் தன்மை (protection) எனலாம். ஏசுவிடம் இவை ஐந்தும் காணப்படுகின்றன. எனவே ஹிந்துக்கள் அவரை வழிபடும் மூர்த்தியாக ஏற்றுக் கொள்கின்றனர். பிறப்பிலிருந்து மரணம்வரை தூய்மையே உருவாக அவர்விளங்கினார். வானத்தில் இருந்து விழும்நீர் தூய்மையானது; பூமியில் விழுந்தவுடன் அது களங்கப்படுகின்றது. புலன்களின் வசப்பட்டோர் களங்கமுடையவர்கள். புலனடக்கம் அவர்களை மேன்மக்கள் ஆக்குகின்றது.மனிதனை அடிமைப் படுத்துவது காமம். ஏசுவின் அறிவுரையாவது. "உலகில் சிலர் அலிகளாகப் பிறக்கின்றனர்; சிலர் அப்படிக் கட்டாயமாக மாற்றப்படுகின்றனர்; ஒரு சிலரோ இறைவனின் அரசை அடையத் தம்மைத் தாமே அலிகள் ஆக்கிக் கொள்கின்றனர்.'' புலனடக்கம் என்பதை

இது உணர்த்துகின்றது. அதுவே ஞானத்தைத் தருகின்றது. ஆத்மன் என்றும் தூய்மையானது; அழியும் சரீரத்துடன் அதை அபிமானிக்கும் போது, மாசு உண்டாகின்றது; ஆண், பெண் என்ற பேதம் சரீரத்தைப் பொறுத்தது, ஆத்மாவைப் பொறுத்தது அன்று. சரீரத்தில் வாழ்ந்த போதிலும் ஏசு ஆத்மாவில் நிலைத்து இருந்தார். அவருடைய முன்னிலையில் ஆண் மகன் தனது புருஷத் தன்மையை மறந்தான், பெண் தனது ஸ்திரீ தன்மையை மறந்தாள். தூய்மையை அவர் வலியுறுத்திய நெறி இது.

காமத்தை முற்றிலும் வென்ற பிறகுதான் ஞானம் சித்திக்க முடியும் என்பது வேதாந்தத்தின் அறுதியான கருத்து. இந்த விஷயத்தில் ஏசுவின் கருத்து வேதாந்தத்துடன் இயைந்து போகின்றது. "ஒரு பெண்ணைக் காமக் கருத்தோடு ஒருவன் பார்த்தாலே விபச்சாரம் செய்தவன் ஆகின்றான்" என்பது அவர் முடிவு. இந்தக் கருத்தின் மேன்மையை எல்லாரும் உணர முடியுமா? அவரைப் போல் தூய்மையின் சிகரததில் உள்ளவர்கள் மட்டுமே அறிய இயலும். இத்தகைய தூய்மையே உருவெடுத்து இருப்பவர்கள் எங்குச் சென்றாலும் தூய்மையை உருவாக்குகினறனர். ஏசு கிறிஸ்து அதையே செய்தாா. தூய்மை இல்லாத மனிதன் அவருடைய ஆடையைத் தொட்டாலும், அதை உணரக்கூடிய அளவு அவரது இயல்பு அமைந்திருந்தது. தெய்வீகத தன்மை பெற்றதாகத் தூய்மை இலங்கியது. மானிடரில் தனிச் சிறப்புப பெற்றவராக அவா இலஙகினா்.

சாதாரண குருமார்கள் சாஸ்திர அறிவினாலும், கல்விப் பெருமையாலும் சிறபபுப் பெறுகின்றனர். ஆயின் தேவ தூதர்கள் நெறி மாறானது. பிறந்தது முதல் பேரின்ப வாழ்வின் அடிப்படை நெறிகளை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். மனிதன் இந்தப் பூவுலகில் பிறவி எடுததது உலக விவகாரங்களில் சிக்கித் தன்னை முற்றிலும் லோகாயத வாழ்வில் பிணைத்துக் கொள்வதற்காக அன்று. உலக வாழ்வு ஒரு பயிற்சிக்களம். ஆனமீக வாழ்வினை நன்கு அமைததுக்கொள்ள அது பயன்பட வேண்டும். "நரிகளுக்கு என்று தனி வளை உள்ளது; பறவைகளுக்கு என்று கூடுகள் உள்ளன; மனிதனுக்கு மட்டும் தலையைச் சாய்த்துப் படுக்க இடம் இல்லை"—என்பது ஏசுவின் உபதேசம். நேரடியாகப் பொருள் கொள்வதால் இதில் சிறப்பு இல்லை. 'மனிதன் மாட மாளிகைகள், ஆடம்பரப் பங்களாக்கள், கோட்டைகள், நகரங்களை உருவாக்கி இருக்கின்றான்; இந்தக் கருத்துச் சரியாக இல்லையே' என்று எண்ணக் கூடாது. தத்துவம் யாது? நரியைப் போல, பறவையைப் போலத் தனக்கு என்று ஒரு குடியிருப்பைத் தேடுபவன் உயர்ந்தவன் அல்லன்; மனிதன் லட்சியம் அத்துடன் முற்றுப்பெறவில்லை. இவ்வுலகிற்கு மேம்பட்ட இடத்தில்தான் அவன் லட்சியம் நிலைபெற வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் இதையே வலியுறுத்துகின்றார். "உலகத்தில் வாழ்; ஆயின் பற்றற்று இரு. தாமரை இலை தண்ணீரில் ஆழ்ந்து கிடப்பினும், அதன்மீது தண்ணீர் ஒட்டுவதில்லை. அது போன்று உலகவாழ்வு உன்னிடம் நிலைத்து இருக்கக்கூடாது; உலகம் உன்னிடம் ஒட்டக்கூடாது."

தனக்கு என்று தனியாக ஒரு வீட்டை ஏசு கட்டவில்லை. நல்ல துறவியாக வாழ்ந்தார்; எல்லாருடனும் தொடர்பு கொண்டு, அவர்கள் பின்னே சென்றார். மனிதர்களுடன் பழகி, தொடர்பு கொள்ளவேண்டும என்று விருமபுகின்றவர்களுக்கு அவர் நல்ல முன்மாதிரி ஆகின்றார். உபதேசம் செய்வதைக் காட்டிலும், வாழ்ந்து காட்டுவதே சிறநதது. பிரார்த்தனையும், உபவாசமும் சாதகனுககு அதிக ஆதம சகதியைத தரும்; இதயததில் எழும் உணர்ச்சிகளுககு வடிகாலாகப பிரார்த்தனை அமைகினறது; நல்ல லடசியத்தோடு உபவாசம் இருப்பது சரீரத்தையும், மனதையும் தூயதாக்குகினறது. ஏசுவின வாழ்ககை இந்த விஷயததில் நலல முன மாதிரி ஆகும். தமமுடைய பக்திப் பெருக்கால் நல்ல சூழ்நிலையை அவர் உருவாககினர். பிரார்ததனைககுத் தனிமை பெரிதும் துணை செய்கினறது. எனவே 'தனித்திருத்தல்' எனற நெறியையும் அவர் வற்புறுததினர். 'பிரார்த்தனை செய்' என்று வாய்ப பேசசுப் பேசாது, அவரே அதில் ஈடுபட்டார். அவருடைய சீடாகள் இயல்பாக அவரைப் பின்பற்றினர்கள். உபதேசத்தின் வடிவமாக அவர் அமைந்திருந்தார்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ஸ்கந்தம் 2 அத்தியாயம் 8

சுகதேவரிடம் பரீக்ஷித்து இங்ஙனம் வினவினான்: ஞானமே வடிவெடுத்த குருதேவா, என் ஆண்டவனின் லீலைகளை, பெருமைகளையெல்லாம் என் தந்தையாரின் உத்தரவுப்படி நாரதர் உலகில் விளக்கியவாறே கேட்க விரும்புகிறேன். எல்லாக் குணநலன்களும் தெய்வசாக்ஷாத்காரமும் பெற்ற தேவரீர் எனக்கு என் ஆண்டவனின் மகிமைகளைத் தொடர்ந்து விளக்கி அருளுவீர்களாக. அதன் மூலம் என் கிருஷ்ணஸ்மரணை உறுதியாகும், இடைவிடாததாகும். நான் உலக ஞாபகம் இன்றியே உயிரை விடுவேன். யார் ஹரி கதையைச் சதா கேட்டு மகிழ்ந்து தானும் ஹரி கதையைப், பெருமையைச் சதா பாடுகிறானோ அவன் உள்ளத்தில் என் ஆண்டவன் உடனே புகுந்து கொள்கிறார்; எழுந்தருள்கிறார். ஆற்றில் ஓடும் மாரிக்காலத்துக் கலங்கிய நீர் வசந்த காலத்தில் தெளிந்த நீராக ஓடுவது போன்று பகவான் பக்தனது உள்ளத்தில் எழுந்தருளியதனால் மானுட தோஷங்கள், மாசுகள் எல்லாம் அகன்று போகின்றன. ஆண்டவன் பக்தனைத் தம் மயம் ஆக்கிக் கொள்கிறார்.

தேசாந்திரம் போன யாத்திரிகன் வீடு திரும்பியதும் எப்படி மறுபடியும் அந்தச் சிரமங்களை மேற்கொள்ளமாட்டானோ அங்ஙனம் என் ஆண்டவனின் அருளுக்குப் பாத்திரமான ஜீவன் ஒருநாளும் அவரது திருவடிகளை விடமாட்டான், வேறு ஒன்றுமே அவனுக்கு வேண்டியிருக்காது, வேறு ஒன்றில் நாட்டம் போகாது. ஓ சுகப்பிரம்ம தேவே! இந்த ஆத்மாவுக்கும் பஞ்ச பூதங்களுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. ஆயினும் இந்த ஆத்மா — ஜீவாத்மா தாங்கியிருக்கிற இந்தச் சரீரம் பஞ்சபூதங்களின் சேர்க்கையால்ஆனது. இப்படி ஜீவ வடிவெடுப்பது அவர் சொந்த சங்கல்பத்தினாலா விருப்பத்தினாலா? அல்லது ஏதாவது வினையின் விளைவாக அமைகிறதா? தேவரீர் இவை யாவற்றையும் உள்ளங்கை நெல்லிக்கனியென அறிவீர்கள். ஸ்ரீமந் நாராயணனுடைய தொப்பூழிலிருந்து வெளிவந்த கமலத்தில் தோன்றியவர் பிரம்மதேவர். மானுட அமைப்பில் பல அங்கங்கள், உறுப்புகள் இருப்பன போன்று அவ்விராட் புருஷனுடைய பல அங்க அமைப்புகள் போன்று உலகங்கள் அமைந்திருப்பதை விளக்கியருளினீர்கள். இங்ஙனம் சிருஷ்டி கிரமத்தை விளக்கி அருளினீர்கள். பிரளயகாலத்தில் யாவும் ஒடுங்கித் தோன்றாநிலைக்குப் போகும்போது அப்புருஷோத்தமன் எங்கு எப்படி இருக்கிறார் என்பதை விளக்கி அருளுவீராக. (நர்சரி குழந்தைகளுக்கு ஓட்டப் பந்தயம் வைத்தார்கள். ஆசிரியை மிகவும் விளக்கமாக இந்தப் போட்டி எப்படி நடக்கிறது, எப்படித் தயார் நிலையில் இருக்கவேண்டும், இலக்கை எப்படித் தொட்டு வரவேண்டும், எப்படி வந்து முடிக்கவேண்டும் என்று சொன்னார். பந்தயம் ஆரம்பித்தது. அதிகமான குழந்தைகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. எதையுமே சொல்லியபடி செய்யவில்லை. யாவரும் ஓடினர். அவ்வளவுதான். நமக்கு வயது வந்திருந்தாலும் கடவுள் விஷயங்களில் நாமும் அதைப்போன்ற நிலையில் தான் இருக்கிறோம். ஆகவே கடவுள் விஷயங்களைப் பல அமைப்புகளில், பல கோணங்களில், பல உதாரணங்களில் நமக்கு விளக்குகிறார்கள். ஆகவே சொன்னதையே சொல்வது போன்று தோன்றினாலும் பாகவதம் பாராயணம் போன்றது. அதைப்படிப்பதை விட்டுவிடக்கூடாது.)

ஐயனே! லோகபாலர்களும், அவர்கள் வாழும் பிரதேசங்களும் அவ்விராட் புருஷனால் சிருஷ்டிக்கப்பட்டன என்றீர்கள். மறுபடியும் லோகபாலர்களும் அவருடைய பிரதேசங்களும் சேர்ந்து அவ்விராட் புருஷனது அங்கங்கள் ஆகின்றன என்று சொன்னீர்கள். இந்த விளக்கத்தின் உட்பொருள் எனக்கு விளங்கவில்லை. ஐயனே மஹாகல்பம் அவாந்திர கல்பம் என்பனவற்றின் கால அளவை என்ன? இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்கிற பெயர்கள் குறிக்கும் காலங்களின் அளவை என்ன? ஜீவன் அழிந்து போகக்கூடிய இந்தச்

சரீரத்தில் வாழ்கிறான்; பிறகு இறக்கிறான். பித்ருக்களாக, இறந்தாராக, தோன்றாநிலையில் தூசரீரமற்ற க்க நிலையில் இருக்கிறான். வினைப் பயனாக மறுபடியும் பிறக்கிறான். படிப்படியாக ஆத்மசாதனம் செய்து மேல்நிலை, முக்தி அடைகிறான். இந்த நிலைகளின் கால அளவை என்ன? எந்தெந்த நிலையில் எவ்வளவு காலம் வாழ்கிறான்? இந்த ஜீவ யாத்திரையில் ஒவ்வொரு ஜீவனுக்கும் தன் யாத்திரையைமுடிக்க நீண்ட காலம் ஆவதும், குறுகிய காலத்தில் அடைவதும் எதனால் ஏற்படுகிறது? பல்வேறு வினைகளின் விளைவாக அவர்கள் அடைகிற பலநிலைகளை விளக்கியருளுங்கள். இந்தப் பூமி, பாதாளம், திசைகள், ஆகாசம், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், பர்வதங்கள், சமுத்திரங்கள், நதிகள், தீவுகள், இவைகளில் உயிர் வாழும் ஜீவர்கள் ஆகிய இவைகள் யாவும் உண்டான விதம் கூறுங்கள். இந்தப் பிரம்மாண்டத்தின் அளவு என்ன? மிகவும் பண்பட்ட, உயர்வான ஜீவனின் லக்ஷணம் என்ன? அவர்களின் உயர் நிலையை நாம் எங்ஙனம் அறிந்துகொள்வது? அவ்வுயர் நிலையை அடைவதற்குரிய மார்க்கங்கள் என்ன? எத்தனை யுகங்கள் உள்ளன? அவைகளின் கால அளவை எவ்வளவு? ஒவ்வொரு யுகத்திலும் சிறப்புற்று விளங்கிய பிரதேசம், உலகம் எது? என் ஆண்டவன் ஸ்ரீஹரியின் அதி ஆச்சரியமான அவதாரம் எது? அவர் அந்த அவதாரத்தில் செய்தருளிய திருவிளையாடல்கள் எவை? மனிதகுலம் யாவுக்கும் பொதுவான மதம், தர்மம், கொள்கை, லக்ஷியம் என்ன? வருண ஆச்ரமங்கள் என்பவை என்ன? அவைகளுக்கு ஏற்பட்ட கடமைகள் என்ன?

வழிபாட்டு முறைகள், அஷ்டாங்கயோகம் இவைகளைத் தேவே! அருள்கூர்ந்து விளக்குங்கள். யோகியர்கள், பக்தர்கள் பெற்றுள்ள நீங்காத செல்வம், மாறாத, பழுது இல்லாத செல்வம், உயர்ந்த செல்வம் எப்படிப்பட்டது? அவர்கள் இவ்வுலகில் எங்ஙனம் வாழ்கிறார்கள்? அவர்களுடைய சரீரங்கள் எப்படி விழுகின்றன? மறைகின்றன? வேதம், உபநிடதம், இதிகாசங்கள், புராணங்கள் ஆகிய நமது சாஸ்திரங்கள் எதை விளக்குகின்றன? பஞ்சபூதங்களின் கூட்டு, சேர்க்கை எங்ஙனம் நிகழ்ந்து எங்ஙனம் புதிய பொருள்கள் உருவாகின்றன? பஞ்சபூதங்களின் ஒடுக்கம், மஹாபிரளயம் எப்படி ஏற்படுகிறது? தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்களை—உறுதிப் பொருள்களை அடைய ஜீவன் எப்படி வாழ வேண்டும்? ஹோமாக்னியால் ஆஹுதியாக எதை எப்படிப் படைக்கவேண்டும்? சதாசர்வ காலமும் ஜீவன் ஆண்டவனின் ஆதரவில், அவன் சன்னிதியில், அவன் அருளில் வாழ்ந்து வருகிறான். இது எல்லா ஜீவனுக்கும் ஓரளவு விளங்குகிறது அப்படி இருந்தும் நாஸ்திகம், நாஸ்திகர் எப்படி உருவாயினர்? ஜீவன் எப்படிப் பந்தத்துக்கு ஆளாகிறான்? திரும்ப எப்படி முக்த புருஷன் ஆகிறான்? தன் நிஜசொரூபத்தை ஜீவன் மறந்தது எப்படி? தன் விருப்பத்தால், சங்கல்ப மாத்திரத்தால் ஆண்டவன் மாயையோடு விளையாடுவது எங்ஙனம்? பிறகு மாயையைப் புறக்கணித்துவிட்டு அவன் காட்சி மாத்திரமாய் இருந்துகொண்டு இவ்வுலகின் பிரளயத்தை, ஒடுக்கத்தைத் தோன்றாத நிலையை அவன் எங்ஙனம் பார்த்துக்கொண்டிருக்கிறான்? தேவரீர் ஒரு தெய்வப் பிறவி. இவையாவையும் எனக்கு விளக்கி அருளப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்வயம்பு—தானே தோன்றியவர் ஆகிய பிரம்ம தேவரைப் போன்று தேவரீர் யாவும் அறிந்தவர். மற்ற முனிவர்கள்தங்கள் முன்னோர்களிடம் கேட்டறிந்ததைச் சொல்கிறார்கள். என் ஐயனே உபவாசம் இருப்பதால் என் உடலோ, மனமோ சோர்வு அடையவில்லை. தீமைபோன்று தென்பட்ட இந்தச் சாபத்தின் மூலம் ஏற்பட்ட தெய்வீக சூழ்நிலை, யான் பெற்றபேறு என்னே! என் ஆண்டவனின் அழியாப் புகழை, மகிமையை அமுதமென நான் பருக நேரிட்டது என்னே! ஆண்டவனுக்கு நிகரான தேவரீரின் அமுத மொழிகள் என் மனதிற்கும் உறுதி பயக்கின்றன. ஜீவபோதம், சரீரபோதம் தேய்ந்து பரபோதம் தலையெடுக்கிறது. இந்தச் சாபம் எனக்கு விளைவித்த பாக்கியங்களுக்காக என் ஆண்டவனை மீண்டும் மீண்டும் வணங்குகிறேன். என் ஆண்டவனின் கருணையே பெரியது.

சூதர் சொன்னார்: ரிஷிகளே, முனிவர்களில் சிரேஷ்டமானவராகிய சுகதேவர் இங்ஙனம்

பாண்டவ சிரோமணியாகிய, கிருஷ்ண பக்தர்களில் தலையாயவனாகிய பரீக்ஷித்தினால் வினவப்பட்டு அந்த தெள்ளி எடுத்த சான்றோர் சபையில் வேதங்களுக்குச் சமமானதாகிய பாகவதத்தை, என் ஆண்டவனால் பிரம்மதேவருக்குச் சொல்லப்பட்டதாகிய அப்புராணத்தைச் சொல்லத் தொடங்கினர். அரசன் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் விடைகள் அதில் அமைந்திருந்தன. அருள்தாகம் மனதின் மிக உயர்ந்த நிலை ஆகும். அதைத் தணிப்பதற்கு ஆண்டவன் அருமையான சூழ்நிலைகளை உண்டு பண்ணுகிறான். நாவுக்கு இனியது, மனதுக்கு இனியது, ஜீவனுக்கு அருங்கலம் ஆவது ஆண்டவன் திருநாமமே, புகழே, மகிமையே ஆகும்.

ஸ்கந்தம் 2. அத்தியாயம் 9.

சுகர் சொன்னது: கனவில் பெற்ற தெய்வக் காட்சி, தெய்வஅருள் எப்படி நிஜமானது, வாஸ்தவமானது, சாஸ்வதமானது என்று சொல்ல முடியாதோ அதே போன்று ஆத்மாவுக்குச் சரீரத்தோடு ஏற்பட்டுள்ள சம்பந்தம் சாஸ்வதமானதுஅன்று, நிரமானது அன்று. நாம் அணிந்துள்ள உடைக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் போன்றது அது. ஆண்டவனின் மாயையால் அதுஒன்றுபட்டதுபோன்று தோன்றிக்கொண்டிருக்கிறது. பேதங்களை, பல்வேறு தன்மைகளை, வடிவங்களை, ஏற்றத் தாழ்வை, துவந்துவத்தை, ஆசைகளைத் தோற்றுவிப்பது, கற்பிப்பது மாயையின் செயல். ஜால வித்தைக்காரன் மற்றவர்களையும் தன் போக்கில் தாற்காலிகமாக நினைக்க வைக்க முடிகிறது. இதோ மாஞ்செடி என்று அவன் சொல்கிறான். அவனது தகரடப்பாவை அகற்றுகிறான். அங்கே மாஞ்செடி இருக்கிறது. மகாமாயாவியாகிய என் ஆண்டவன் சங்கல்பத்தினால், மாயையினால் ஜீவர்கள் எல்லாம் தங்களை மறந்து மாயையின் ஆதிக்கத்துக்கு உட்ப்படவர்களாக யான் எனது என்கிற அகங்கார மமகாரத்தின் வசப்பட்டவர்களாகி மகிழ்கிறார்கள், பெருமையடைகிறார்கள். பாலன் ஒருவனுக்கு மந்திரவாதியின் கற்பனை மாஞ்செடி தெரியவில்லை. அது வெறும் வெளியாகவே தென்படுகிறது. அவன் மனது மாசு மருவற்றது. அது மனோவசியத்தில் கட்டுப்படுவதில்லை. அதேபோன்று மனமாசுகள் அகன்ற நிலையில், அதன் சுத்த நிலையில், யதார்த்த நிலையில், அகங்காரம் மமகாரம்—மாயை மறைந்து விடுகிறது. இந்தச் சுத்தநிலை அன்றாடம் ஜீவனுக்குச் சுஷுப்தியில் காட்டப்படுகிறது. ஆனால் அதைப் புரிந்து கொள்வதற்கு ஆண்டவன் அருள் வேண்டும். கண்ணைக்கட்டி மறைத்தவனே அதை அவிழ்த்து விடவேண்டும். சூரியனை மேகம் மறைக்கிறது. பிறகு அது தானே விலகுகிறது. சூரியன் தன் யதார்த்த நிலையில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. மேகம் சூரியனால் உண்டாக்கப்பட்டது. சூரியனின் ஒரு சிறு பகுதியை மேகம் தாற்காலிகமாக மறைக்கிறது. புருஷ பிரகிருதி தத்துவத்தில் ஏற்பட்ட ஜீவ உபாதியில் ஜீவ தசையில் மிக உயர்ந்த நிலை அகங்கார மமகாரத்தைத் துடைத்த நிலையாகும். பழையபடி தன் யதார்த்த நிலையில் நிஜ சொருபத்தில் விளங்குவதாகும். ஆண்டவனைத் தாகமாய் நாடினவரை மாயை பாதிக்க வல்லதன்று. பிரம்மதேவர் மிகுந்த பக்தியுடன் ஸ்ரீமந் நாராயணனை, ஜகந்நாதனை வழிபட்டதும் அவர் பிரீதி அடைந்தவராய்ப் பிரம்மதேவருக்கு ஆத்ம தத்துவங்களைப் போதித்துத் தரிசனம் தந்தருளினர். அருள்தாகம் வாய்த்த ஆத்ம சாதகர்கள் இவ்விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். பள்ளிகொண்ட பரந்தாமனின் உந்திக்கமலத்தில் அமர்ந்துகொண்டு பிரம்மதேவர் இப்பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஒன்றுமே புலப்படவில்லை. எப்படிச் சிருஷ்டிப்பது, நிர்வகிப்பது, ஒழுங்குப்பாடு அமைப்பது, அதை மேலாம் லக்ஷியம் உடையதாக அமைப்பது எப்படி, ஆகிய விஷயங்கள் அவர் மனதிற்குட்படவே இல்லை. ஆண்டவன் அருளால் அவருக்குத் தியானம் பண்ணத் தோன்றியது. மிகுந்த ஒருமைப்பாட்டுடன் அவர் தியானம் பண்ணினர். அப்பொழுது அவருக்குப் பக்கத்திலிருந்து அசரீரி வாக்கு ஒன்று கேட்டது. இரண்டே எழுத்துக்கள் கொண்ட ஒருபதம் இரண்டு தடவை சொல்லப்பட்டது. பதினாறாவது மெய்யெழுத்தும் (த) இருபத்து ஒன்றாவது மெய்யெழுத்தும் (ப) இங்ஙனம் உச்சரிக்கப்பட்டன. இரண்டு எழுத்துக்களும் சேர்ந்து தப: என்று

ஆயிற்று. இது ஆண்டவனின் கட்டளை. ஜீவர்களுக்கு இதுவே பெருநிதி, அருள்நிதி ஆகும். அவர்கள் உய்வதற்கு இதுவே வழி. முக்கியமாகச் சன்மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பவனுக்குத் தவமே உயிர் நாடி. பிரம்ம தேவர் இதைப் பகர்ந்தது யார் என்று சுற்றிலும் பார்த்தார். யாரும் தென்படவில்லை. ஆயினும் தனக்கு நலம் தரும் சொல் இதுவே என்பதைக்கண்டு கொண்டார். பிரம்ம தேவர் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டார். ஆண்டவனே இதை உபதேசிக்கிறார் என்பதைப் பிரம்மதேவர் கண்டு கொண்டார்.

வேறு எண்ணங்களை எல்லாம் விடுத்து இந்திரியங்களையும் பிராணனையும் அடக்கி ஆயிரம் ஆயிரம் தேவ வருஷங்கள் பிரம்மதேவர் மிகவும் ஆழ்ந்த தபஸ் செய்தார். பகவான் ஸ்ரீமந் நாராயணர் மிகவும் பிரீதி அடைந்து தம் இருப்பிடமாகிய வைகுண்டத்தைக் காட்டியருளினார். அங்குத் துன்பம் இல்லை, பயம் இல்லை. அங்குள்ள பாகவதர்கள் எப்போதும் என் ஆண்டவனின் புகழ்பாடிக் கொண்டிருக்கிறார்கள். ரஜோகுணம் தமோகுணம் கொஞ்சமும் கலவாத சுத்த சத்துவகுணத்தில் வைகுண்ட வாசிகள் நிலைத்துள்ளார்கள், ஆகையால் அங்குப் பொறாமை, போட்டி போன்ற எந்தக்கெட்ட குணமும் அவர்களிடம் இல்லை. மாயையின் ஆதிக்கமும் அங்குச் செல்லாது. அங்கு வாழும் வைகுண்ட வாசிகளின் அழகை என்னால் வர்ணிக்கவே முடியாது. அவர்கள் மரகத பச்சை நிறம் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் மேனி பிரகாசம் பொருந்தியதாய் இருந்தது. அவர்களுடைய அகன்ற கண்கள் மலர்ந்த செந்தாமரை போன்று இருந்தன. அவர்கள் மஞ்சள் ஆடை உடுத்தியிருந்தனர். அவர்களுடைய தோற்றப் பொலிவு மனோகரமாய், இனியதாய், ரம்மியமாய் இருந்தது. அவர்களுடைய அங்கம் மிகவும் மென்மையாய் இளமையாய் இருந்தது. மிக உயர்ந்த நவரத்தினக் கற்கள்பதிந்த ஒளி மிக்க நகைகள் அணிந்திருந்தார்கள். அனைவருக்கும் நல்ல ரதங்கள் இருந்தன. அவர்களுடைய அழகை வர்ணிக்க முடியாது. செல்வ செழிப்பைச் சொல்லி முடியாது. ஸ்ரீ தேவி, லக்ஷ்மி தேவி என் ஆண்டவனுக்குப் பாதசேவை, பணிவிடை பண்ணிக்கொண்டு அங்கு வசிக்கிறாள் அல்லவா? அங்கு அழகுக்கும் செழிப்புக்கும் மங்களத்துக்கும் எப்படிக்குறைவு ஏற்படமுடியும்? சூழ்ந்துள்ள பக்தர்கள் குழாம் என் ஆண்டவனைப் பற்றி உருகிப்பாடும்பொழுது என் தாய் லக்ஷ்மிதேவியும் அவர்களுடன் சேர்ந்து மிக்க பக்தியுடனும் ஆனந்த பரவச நிலையில் இருந்துகொண்டும் இனிமையாகவும் தன்னை மறந்தும் பாடிக்கொண்டிருக்கிறாள். பிரம்மதேவர் இக்காட்சிகளை எல்லாம் வைகுண்டத்தில் கண்டார். பாகவதர்கள், லக்ஷ்மிதேவி பக்திப்பரவசம், வேள்விகள், இப்பிரபஞ்சம் அனைத்தையும் பிரம்மதேவர் கண்டார். மாயவனின் வயிற்றுக்குள்ளே இப்பிரபஞ்சத்தையெல்லாம் கண்டார். ஆண்டவனை இடம் தாங்கியிருக்கவில்லை. காலம் தேசம் வர்த்தமானம் எல்லாம் அவனுக்குள் அடக்கம். ஆண்டவனால் இவை அனைத்தும் தோற்றுவிக்கப்படுகின்றன, ரக்ஷிக்கப்படுகின்றன, பழையபடி தன்னுள்ளேயே ஒடுக்கிக்கொள்ளப்படுகின்றன. என் ஆண்டவனிடம் மிகுந்த பக்தி கொண்ட சுனந்தனன், நந்தன், பிரபலன் முதலிய பக்தர்கள் ஆங்கு நிகழ்ந்து கொண்டிருந்த ஓயாத பூஜையில் கலந்து கொண்டிருந்தனர். பக்திக்குத் தன்னையே கொடுத்து விடுகிற ஆண்டவனின் அருள் நிலை பார்த்தாலே விளங்கியது, அவனது பக்தர்கள் ஒரு நாளும் தாங்கள் விரும்பியதைப் பெறாமல் இருந்ததில்லை. பக்தர்கள் விரும்புவதெல்லாம் என் ஆண்டவன் ஒருவனையே, அவன் திருவடிகளையே விரும்புகிறார்கள். என் ஆண்டவன் பக்திக்கு வசப்பட்டவனாக ஆங்கு இருக்கிற நிலை, கோலம் நம்மை மீண்டும் அவனையே ஆழ்ந்து பற்றிப் பிடிக்கச் செய்கிறது. என் ஆண்டவனின் அழகிய, தாமரைபோன்ற கண்கள் உணர்ச்சியினால் பொங்கி ஆனந்தக் கண்ணீரில் நனைந்து இருக்கிறது. அவரது அழகிய கோமளவதனம் சுந்தரவதனம் அருளாலும் எல்லா மங்களங்களாலும் பொலிவுற்றுப் பிரகாசிக்கிறது. ராஜீவ நேத்ரா, கமலாக்ஷா, கஞ்சவிலோசனா என்று பக்தர்களால் அவன் அழகிய கண்கள் துதிக்கப்படுகின்றன. அவனது அழகிய கிரீடம், காதுகளில் குண்டலங்கள் இடையில் பீதாம்பரம். அவனது நான்கு

கரங்களில் தாங்கியுள்ள சங்கு, சக்கரம், கதை, தாமரை கௌஸ்துப பூஷணம் எல்லாம் அவனது அழகைக் கூட்டுகின்றன. அவைகளும் ஆண்டவனல் அழகு, பெருமை பெறுகின்றன. என் ஆண்டவனின் மார்பில் ஸ்ரீ தேவி வசிக்கிருள். என் ஆண்டவன் தன்னில் தானய் சுயம் ஜோதியாய் அவனது ஒப்பற்ற அளவற்ற விபூதிகளுடன் மகிமைகளுடன் உயர்ந்ததோர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறுன். இங்ஙனம் ஆனந்த காட்சியைக் கண்டுகொண்டிருந்த பிரம்மதேவருக்கு ஆண்டவனின் சொரூப லக்ஷணம் அவரது யதார்த்த நிலை விபூதிகள் மனதில் தோன்ற ஆரம்பித்தன. ஆ! என் ஆண்டவன் ஆதி அந்தமற்றவன். அவன் தாயுமிலி, தந்தையுமிலி, தான் தனியன். அவன் தோன்றிவந்த பொருளன்று. அவனிடத்திலிருந்து அனைத்தும் தோன்றுகின்றன. விராட் புருஷனும், தன்மாத்திரைகளும், பஞ்ச பூதங்களும், ஞான கர்ம இந்திரியங்களும் மனதும் அந்தக்கரணமும் தோன்றிவந்துள்ளன. தொண்ணூற்று ஆறு தத்துவங்களாகவும், கலைஞானங்களாகவும், வேதங்களாகவும், சாதனங்களாகவும் வடிவெடுத்தவன் அவனே. இங்ஙனம் விரிகிற தோன்றுகிற தன்மையை மாயை என்கிருர்கள். ஆண்டவன் தன் மாயையோடு விளையாடுகிறுன். தோன்றிய நிலையிலும் தோன்ரு நிலையிலும் அவன்தான் இருக்கிறுன். அவனுக்கு அன்னியமாக ஒன்றுமில்லை. எம்பெருமான் ஆண்டவன் பெருமை மிக்கவன். இவைகளை எல்லாம் காணலுற்ற, உணர்ந்த பிரம்மதேவருக்கு ஆனந்தம் மேலிட்டது. அவரது ரோமம் சிலிர்த்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது, ஆண்டவனின் திருவடிகளை வணங்கினர். ஆண்டவனின் மகிமையை உணர்ந்தவன் வேறு என்ன தான் செய்ய முடியும்! செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது. என் ஆண்டவனே என் அனைத்தும் ஆகிறுன். உயர்வற உயர் நலம் உடையவன் அவனே.

விவேகம்

(சகோதரி நிவேதிதையின் ஆங்கிலக் கட்டுரையை யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா தமிழில் மொழிபெயர்த்தது)

மக்களில் இரண்டுவிதமானவர்கள் இருக்கிறார்கள். அந்தந்தக் கணத்தில் வரும் அனுபவங்களை அப்படியே ஏற்றுக்கொண்டு அதற்கு மேல் ஒன்றும் சிந்திக்காமல், வளைக்குள் நிம்மதியாக வாழும் எலியைப் போல் வாழ்பவர் ஒரு கூட்டம்; ஒரு லட்சியத்திற்காகத் தம் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்திருப்போர் இன்னொரு சாரார். இவ்விருவருக்கும் இடையில் உள்ள வேறுபாடு மடுவுக்கும் மலைக்கும் உள்ள வேறுபாடு போன்றது என்பது சொல்லாமலே விளங்கும். கொண்டுள்ள லட்சியத்தில் குறையிருந்தாலும், லட்சியத்திற்காக வாழும் வாழ்க்கை, இந்திரியங்களுக்கு வசப்பட்டவனின் வாழ்வை விட என்றும் மேலானதே. சான்றோர்கள் காட்டிய பாதையில் செல்ல முயலும் எளியவனும் சிறப்புக்குரியவன் ஆகிறான். சுயநலத்தில் ஊறி இன்பம் துய்ப்பதில் கருத்தாய் இருப்பவனின் பேச்சு எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அவன் சக்தி அசுர சக்தியாக இருந்தாலும் அவனுடைய வாழ்க்கையில் சிறப்பொன்றுமில்லை. அடிப்படையான மனப் பண்பாட்டை மறந்து வெளிவேஷத்தில் நாம் மயங்கிவிடக் கூடாது. எந்த நற்பண்பு அல்லது நற்செயலின் மீதும் ஆன்மீக ஒளியைப் பாய்ச்சுவது விவேகம் என்னும் அடிப்படைப் பண்புதான். நற்செயல்கள் கூட விவேகத்தின் ஒப்புதல் பெறாதபோது ஆன்ம முன்னேற்றத்திற்கு அதிகம் உதவ மாட்டா. மனிதன் வாழ்வில் வசதிகளை எவ்வளவுதான் பெருக்கிக்கொண்டு போனாலும் விவேகமில்லாத இடத்து விலங்குகளைவிட எந்தவிதத்திலும் சிறந்தவன் ஆகிவிடமாட்டான்.

தானம் என்ற பெயரில் பொருளைப் பெருமிதமாக வாரி வழங்குவதைச் சிறப்புடையதென்று அனுபவமில்லாதவர்கள் கருதுகிறார்கள். கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தவுடனேயே உள்ளதையெல்லாம் கொட்டிக்கொடுப்பதுதான் வள்ளன்மை என்று பலர் நினைக்கிறார்கள். அப்படிப்பட்ட கொடையாளியின் அருகில், தான் மட்டும் அறியும் காரணங்களுக்காகக் கொடுக்க மறுப்பவன் எவ்விதச் சிறப்பும், வள்ளல் தன்மையும் இல்லாதவன் போலத் தென்படுகிறான். ஆனால் இது விஷயத்தில் கீதை கூறுவது என்ன என்று பார்ப்போம். உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில் தகுதியுடைய மனிதனுக்குக் கொடுக்கப்படுவதே ஸாத்விகமான தானம் என்கிறது கீதை. எனவே யோசித்துப் பார்க்காமல் அள்ளி வழங்குவதைவிட அறிந்து வழங்குவதே என்றும் சிறந்தது. உதவி பெறும் பாத்திரத்தையோ, கொடுப்பதால் வரும் விளைவுகளையோ விசாரித்துப் பார்க்கும் விவேகமில்லாதவனின் கொடை தாமஸிகமானது.

இவ்வாறே, ஒவ்வொரு விஷயத்திலும் நம் விவேகம் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கொண்டுதான் நாம் மனதை உடைய மனிதர்கள்தானா அல்லது மக்களைப் போலக் காட்சி கொடுக்கும் மாக்களா என்பதைத் தீர்மானிக்க முடியும். இந்திரிய வாழ்வா, இலட்சிய வாழ்வா, சரீரமா, ஆன்மாவா நீ எதை நாடுகிறாய்? அதில்தான் உன் விவேகத்தின் தரம் வெளியாகிறது.

மக்கள் பலர் தம் செயலிலும் பேச்சிலும் பெரிய காரியங்களைச் செய்வதுபோல் காட்டிக் கொள்வார்கள். அத்தகையவர்களின் கவர்ச்சிகரமான, பிரம்மாண்டமான அசுர முயற்சிகளைக் கண்டு நாம் மயங்கி விடக்கூடாது. பைபிளில் ஒரு கதை சொல்லப்படுகிறது. அரசன் ஒருவன் இருந்தான். தன் தகைமையைப் பற்றிப் பெருமையாக நினைத்துக்கொண்டிருந்த அந்த அரசன், தன்னைப்போலவே ஒரு தங்கப் பதுமை செய்து அதை எல்லாரும் வணங்க வேண்டும் என்று ஆணைவிட்டான். ஆனால், அந்தோ, புத்தி பேதலித்திருந்த அந்த அரசன் ஆணையைப் பிறப்பித்த அடுத்த சில மணி நேரத்திற்குள் ஆடு மாடுகளோடு சேர்ந்து கொண்டு புல் மேய ஆரம்பித்து விட்டான்! தன்னைத் தெய்வமாகக் காட்டிக்கொள்ள விரும்பியவன், தான் விலங்கினும் கீழாக இருக்கும் உண்மையை வெளிப்படுத்தி விட்டான்! மக்க

ளுக்குப் புதிய மதம் ஒன்றையே வழங்கியவன் போலப் பேசியவன் அடுத்த கணம் விலங்கு களைப் போல நான்கு காலில் தவழ ஆரம்பித்து விட்டான்! இந்த அரசனை விடத் தன்னடக்கம், சுயநலமின்மை, அன்புடைமை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க முயலுகின்ற ஏழை ஒருவன் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் எவ்வளவோ உயர்ந்தவனுவான். வெளிவேஷமன்று, விவேகத் தினுல் விளையும் மனப்பண்பே, தன்னடக்கம் முதலிய நற்பண்புகளே, ஒருவன் முயன்று பெற வேண்டியவை. அதனுல்தான் மனித குலத்திற்கு உண்மையை உணர்த்தி உதவி செய்த பெரியவர்கள் எல்லாரும் இதை முடிந்த லட்சியம் என்று சொல்லியிருக்கிருர்கள். மக்க ளுக்கிடையில் உள்ள தராதரத்தைத் தெளிவு படுத்துவது செல்வமோ, பதவியோ, அதிகா ரமோ அல்ல; தன்னடக்கம்தான்; தன்னடக்கம் மட்டும் தான் அடிப்படை உண்மைகளைப் பிரத்தியக்ஷமாக உணரும் அவதார புருஷர்கள் அனைவரும் முற்றிலும் தன்னடக்கம் பயின்றி ருக்கிருர்கள்; அதையே போதித்திருக்கிருர் கள். அதற்குக் குறைந்த எந்த லட்சியமும் வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்க முடி யாது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனல் தன்னடக்கம், தெய்வ பக்தி இவற்றின் பெய ரால் அவர்கள் ஒரு போதும் உலக வர்ழ்வை இகழ்வது கிடையாது. “இது பாரமார்த்திகம் இது லெளகிகம்” என்று எதையும் ஒதுக்க வில்லை. வாழ்வின் எல்லாப் படித்தரங்களையும் பரமனுக்கு உரியவைகளாகவே பார்க்கிருர் கள். அனுபவம் என்னும் பாடத்தை ஜீவர்கள் கற்றுக் கொள்வதற்கு ஏற்பட்ட கல்விச் சாலையே இவ்வுலகம் என்பது அவர்கள் கொள்கை. ஆத்ம சாதனம் செய்வதாக நினைத் துக் கொண்டு அறிவை மழுங்கச் செய்வதை அவர்கள் ஆமோதிப்பதில்லை.

ஏதேனும் ஒரு மார்க்கத்தை உறுதியாகக் கடைப்பிடித்துக்கொண்டு, இம்மாயப் பிரபஞ் சத்தைக் கடந்து பரப்பிரம்மத்தை அடைவோ மாக! மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதை நாம் மறந்து விடலாகாது.

பள்ளியில் பயில வந்திருக்கும் மாணவன் அங்கு எவ்வாறு நடந்துகொள்கிருன் என்ப தில் கவனமாக இருக்கவேண்டும். ஆத்ம சாதகன் செய்யும் ஒவ்வொரு செயலும் கவனிக் கப்படுகிறது. தரம் பார்க்கப்படுகிறது. இறை வழிபாட்டிலேயே நேரத்தைச் செலவிட வேண் டியவன் என்று நினைத்து உலகக் கடமைகளை ஏனேதானே வென்று செய்யக் கூடாது. உல கக் கடமைகள் வேறு ஆத்ம சாதனம் வேறு என்ற தவருன கொள்கை உடையவர்கள்தாம் அப்படிச் செய்வார்கள். தபஸ் என்பது பூஜை அறையில் அமர்ந்து கண்ணைமூடி தியா னம் செய்வது மட்டுமன்று. மந்திரம் என்பது இறைவனின் திருநாமம் மட்டுமன்று. அபர வித்தைகளில் காணப்படும் ஒவ்வொரு சிறந்த கருத்தும் நம்மைத் தெய்வ வழிபாட்டிற்கு அழைக்கின்றது. அந்த அழைப்புக்கு நாம் செவி சாய்க்கப் போகிருேமா? உதாஸீனமாக இருந்துவிடப் போகிருேமா? இந்தச் சவாலைக் குறித்து நாம் எடுக்கும் முடிவு கடவுளையோ உண்மையையோ எந்த விதத்திலும் பாதிக் காது. ஆனல் நம் தரத்தை நம் விவேகத்தின் பக்குவத்தைத் தீர்மானிக்கும். நம் வாழ்க்கை யின் ஒவ்வொரு செயலும், பிரச்சினையும், எழும் கேள்வியும் நமக்கு வைக்கப்படும் ஒரு சோதனை. வாழ்வே ஒரு நீண்டசோதனை என் பதை நாம் அறிந்து செயல்படவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு சிறு செயலும் கூட அது வரை நாம் பெற்றிருக்கும் பயிற்சியை, பக்கு வத்தை வெளிப்படுத்தும். அவை ஒவ்வொன் றும் நம் வலிமையை, தகுதியை அதிகரிக் கவோ குறைக்கவோ செய்கின்றன.

ஆன்மீகம் குருட்டுப் போக்காக வாய்ப்பது அன்று. எங்கும் நிறைந்ததும், என்றும் உள் ளதுமான ஸத்தியவஸ்துவை உன் இதயக் கோவிலில் பிரதிஷ்டை செய்ய நீ விரும்பினல், நீண்டகாலம் கவனமாக உன்னை நீபண்படுத்தி யாக வேண்டும். சிறியதும் பெரியதுமான எல்லாச் செயல்களிலும் நீ உண்மையை நாடி யிருந்தால்தான் உன் அந்தக் கரணத்தில் ஸத்யம் என்னும் ஆத்ம ஜோதியைத் தரிசிக்க முடியும். ஏனெனில் அது பொய்வளர் நெஞ்சி னர்கள் காணுத காட்சி. எனவே வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் காட்டும் விவேகம்தான் முடிவான நித்தியானந்தத்தை அளிக்கும் என் பதை நினைவில் கொண்டு நல்ல விவேகிகள் ஆவோமாக.

குறிப்புகள்

கலைப்பள்ளி

பண்பாட்டை வளர்க்கும் கல்வியைக் குழந்தைகளுக்குத் தருவதில் பள்ளிகள் செயல்பட்டு வரவேண்டும். இன்றைக்குப் பள்ளிகளை வியாபார நோக்கத்தோடு நடத்துபவர்கள் இருக்கிறார்கள். தெய்வ நம்பிக்கையைக் கெடுக்கக்கூடிய முறையில் அரசாங்கமும் பள்ளிகளை நடத்தி வருகின்றது. இப்பள்ளிகள் பண்பட்ட கல்வியையோ, தரமான கல்வியையோ குழந்தைகளுக்குத் தருவதில்லை. ஆகையால் கல்விக்கூடங்களிலிருந்து கல்வியை முடித்து விட்டு வெளி வருபவர்கள் சமுதாயத்துக்குப் பிரச்னையுள்ளவர்களாகவும், சுயநலம் படைத்தவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

ஒழுக்கத்தையும், பண்பாட்டையும், நல்ல பழக்க வழக்கங்களையும் வளர்க்கக் கூடிய பள்ளிகள் சில இருக்கின்றன. அப்பள்ளிகளில் கல்வி பெறும் குழந்தைகள் தங்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுகின்றவர்களாக உருவாகி வருகின்றனர். அப்படி நன்மக்களை உருவாக்கும் பள்ளிகளுள் திருச்சி உறையூரில் அமைந்துள்ள கலைப்பள்ளியும் ஒன்றாகும்.

ஆண்டுதோறும் அப்பள்ளி ஆண்டு விழா நடாத்தி வருகின்றது. அவ் ஆண்டு விழாவில் அக்குழந்தைகள் தாங்கள் பெற்றுவரும் கல்விப் பயிற்சியை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் சிலவற்றைக் காட்டுகிறார்கள். உபநிஷத மந்திரங்கள் சிலவற்றைத் தெளிவாக உச்சரிக்கின்றார்கள். தெய்வ நாமங்களை உணர்வோடு உச்சரிக்கின்றார்கள். தேவாரம், திருவாசகம் பகவத் கீதை முதலிய நூல்களிலிருந்து சில பகுதிகளை மனப்பாடமாக ஒப்புவிக்கின்றார்கள். உயர்ந்த கருத்துக்களை மற்றவர்களுக்குச் சொற்பொழிவின் மூலம் எடுத்துக் கூறுகிறார்கள். நாடகங்கள் சில நடித்துத் தங்களுடைய நடிப்புத் திறனையும் வெளிப்படுத்துகின்றார்கள்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்றிலும் அவர்கள் முறையான பயிற்சி பெற்று வருவதை அவர்கள் ஆண்டுவிழாவில் நிரூபித்துக் காட்டுகிறார்கள். மூன்று மணிநேரம் அடக்கமாகவும் அமைதியாகவும் அமர்ந்திருந்து அவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது அவர்கள் நல்லபண்பாடு பெற்று வருகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஆண்டுதோறும் மார்கழிமாதம் முழுவதும் ராமாயணம், மஹாபாரதம், பெரியபுராணம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஆகிய நூல்களுள் ஏதாவது ஒன்றை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டு ஆசிரியர்களும் நிர்வாகியும் அந்நூலிலுள்ள கருத்துக்களை ஆராய்ச்சி செய்து தெளிவு பெறுகிறார்கள். இந்தச் செயலின் மூலம் நூல் ஆராய்ச்சி செய்கின்ற பயிற்சியை ஆசிரியர்கள் பெற்றுவருகின்றார்கள்.

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்பது கோட்பாடு. அக்கோட்பாட்டுக்கிணங்க அப்பள்ளி எளிய கட்டடத்தில் அமைந்திருந்தாலும் சீரிய கல்வியைக் குழந்தைகளுக்குத் தந்து வருகிறது.

செய்திகள்

நிகழ்பவை :

14—4—85 அன்று கரூர் பசுபதீஸ்வரர்கோயிலில் மாலை 6 மணிமுதல் இரவு 8-30 மணிவரையிலும், 28—4—85 அன்று பொள்ளாச்சி தாலுக்கா மலையாண்டிப்பட்டணம் பத்ரகாளியம்மன் கோயிலில் இரவு 7-30 மணியிலிருந்து 9-30 மணிவரையிலும் ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் அந்தர்யோகங்கள் நடத்துவார்கள்.

ஏப்ரல் 25, 26, 27 வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களில் விருதுநகர் சக்தி சங்கத்தினர் நடத்தும் சிறுமிகளுக்கான கோடை முகாமில் தபோவனத் துறவிகள் கலந்து கொள்வார்கள்.

28—4—85 ஞாயிற்றுக்கிழமையன்று சக்தி சங்கத்தினர் நடத்தும் பெரியவர்களுக்கான அந்தர்யோகத்லைத் தபோவனத்துறவி ஒருவர் நடத்திவைப்பார்.

மே மாதம் 12, 13 தேதிகளில் வடஆற்காடு ஜில்லா மதினப்பள்ளியில் மாலை 6-30 மணியிலிருந்து 8-30 மணிவரையில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் லக்ஷார்ச்சனை செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தமிழ் வியாக்கியானம்		ரூ. 26-00
திருவாசகம்	பிரசாரவிலை	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,,	21-00
மஹாபாரதம்	,,	8-00
இராமாயணம்	,,	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,,	6-50
தினசரி தியானம்	,,	5-00
ஞானயோக விளக்கம்		15-00
ராஜயோக விளக்கம்		12-00
கர்மயோக விளக்கம்		10-00
பக்தியோக விளக்கம்		9-00
விவேகானந்த விவரணம்		7-50
விவேகானந்த உபநிஷதம்		7-00
பரமஹம்சரின் பெருமை		6-00
கடவுளின் வடிவங்கள்		6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1		5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2		5-50
மாணவருக்கு ஒரு சொல்		4-50
சகோதரி நிவேதிதை		3-75
சுவாமி விவேகானந்தர்		3-50
பஜனைப்பாடல்கள்		3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்		3-00
அனுஷ்டான வேதாந்தம்		3-00
எதிர்கால இந்தியா		3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	3-50
பரிபூரணானந்தம்	ஷை	3-00
சின்மயானந்த குரு	ஷை	3-00
ஆனந்தமானபரம்	ஷை	3-00
சுகவாரி	ஷை	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	2-50
மலைவளர் காதலி	ஷை	1-50
பரசிவ வணக்கம்	ஷை	1-00
கண்ணன் என்னும் கடவுள்		2-50
அறம் வளர்த்த நம்பி		2-50
சந்நியாசி		2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	2-50
ஹரிச்சந்திரன்	ஷை	2-00
தவப்புதல்வர்கள்	ஷை	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	ஷை	1-75
விபீஷணன் சரணாகதி	ஷை	1-50
பரமஹம்ஷசர் பாமாலை		1-50
காயத்ரீ		1-50
மாணிக்கன்		1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		1-25
சைவன் யார்?		1-25

*ஆலய வழிபாடு		1-25
*ஆத்ம சக்தி		1-25
*மனிதனது நிஜசொரூபம்		1-25
*சிவதத்துவம்		1-25
இறைவணக்கம்		1-00
குழந்தைகளின் களிக்கூடம்		1-00
இராவண தத்துவம்		1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	2-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	1-00
தபோபலன்	(நாடகம்)	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	,,	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்		1-00
நோய்க்கு இடம் கொடேல்		1-00
*கணபதி		1-00
*சக்தி தத்துவம்		0-90
*சூரியநாராயணன்		0-75
தெய்வீக மகிமைகள்		0-75
*முருகக்கடவுள்		0-75
வர்ணாச்ரம தர்மம்		0-75
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு		0-60
*விஷ்ணு தத்துவம்		0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)		10-00
விவேகானந்தரின் வீர கர்ஜனை		0-40
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		0-30
கந்தர் அநுபூதி		0-30
The Bhagavad Gita (12th Imp.)		30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education		10-00
Tirukkural (with plastic cover)		9-00
Ramakrishna lives Vedanta		8-00
Mahaveer Sri Hanuman		7-75
Man Making Message		7-00
Siva Sahasranama Stotram		7-00
Ramayana	(with plastic cover)	7-00
Mahabharata	,,	6-00
The Bhagavad Gita (Small Size)		6-00
Sri Krishna-The Manifest Divinity	,,	6-00
Daily Divine Digest (DELUXE)		6-00
Daily Divine Digest (Ordinary)		4-00
Facets of Brahman or The Hindu Gods		5-00
Sri Vishnu Sahasranama Stotram		4-00
Thus Speaks Tayumana Swamigal		3-50
*Introducing The Gita		2-00
Holy Bible—In the Light of Vedanta		1-50
Reminiscences of Master Mahashaya		1-50
The Nursery School		1-50
The Garland of Paraaparam		1-50
*Key to Higher Life		1-25
*The Student		1-25

* இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

மாதேசுவரன்மலையில் அந்தர்யோகம்-8

1985ஆம் ஆண்டு மே மாதம் 16, 17 வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனம்

ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்களால்

கர்நாடக மாநிலம் மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம் நடைபெறும். மேட்டூரிலிருந்து மாதேசுவரன் மலைக்கு அதிகாலை 4 மணிக்கும், மாலை 5-50க்கும் வெங்கடேஸ்வரா பஸ் நேரிடையாகச் செல்லுகிறது. பாலாற்றிலிருந்து காலை 7-30 மணிக்கும், மாலை 2-30 மணிக்கும் மாதேசுவரன் மலைக்குப் பஸ் புறப்படுகிறது. வேன் மூலமாகவும் பாலாற்றிலிருந்து மாதேசுவரன் மலைக்குப் போக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது விஷயத்துக்கு ஸ்ரீமத் சுவாமி சிதாபானந்த, ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம், சின்னதண்டா P. O., Via கொளத்தூர், சேலம் ஜில்லா. என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் மேற்படி விலாசதாரரிடமோ, திரு. N. அன்னையன், சன்மார்க்கச் சங்கம், மேச்சேரி P. O., சேலம் ஜில்லா என்னும் விலாசதாரரிடமோ நபர் ஒன்றுக்கு ரூபாய் முப்பது வீதம் M. O மூலமோ, நேரிலோ செலுத்திப் பதிவுசெய்து அனுமதி கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். மே மாதம் 15ஆம் தேதி புதன் கிழமை மாலை 6 மணிக்குள் மாதேசுவரன் மலைக்குப் படுக்கை வசதியுடன் வந்து சேரவேண்டும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள இயலாதவர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்		4-30
நாமஜபம்	5-00	5-30
ஆசனம், நீராடல்	5-30	7-00
தியானம்	7-00	7-45
சிற்றுண்டி	7-45	8-45
உபந்யாசம்	8-45	9-45
மௌனம்	9-45	10-30
பஜனை	10-30	11-15
ஆலயவழிபாடு, அர்ச்சனை, ஆரதி	11-15	12-30

மாலை

	மணிமுதல்	மணிவரை
உணவு, ஓய்வு	1-00	3-00
உபந்யாசம்	3-00	4-00
வாசிப்பு	4-00	4-30
பானம், உலாவல், நீராடல்	4-30	6-30
அர்ச்சனை	6-30	7-30
தியானம்	7-30	7-45
உணவு	7-45	8-45
ஸத் ஸம்பாஷணை	8-45	9-30
நித்திரை	9-30	

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.